www.padippakam.com

விலை ரூ. 3-00 LICENCE No. TN/MS(N) WPP-100

# ஈழ சுதந்திரன்
## ELASUTANTIRAN



திருவள்ளுவராண்டு
௨௦௨௯
மாசி - பங்குனி
ஏப்ரல்- 1998
புத்தகம் : 11 இதழ்: 5

⁘ உணவில்லை-உடையில்லை-உறையுள் இல்லை
⁘ நலமில்லை-மருந்தில்லை-வைத்தியமில்லை
⁘ ஷெல் அடியும் குண்டடியும் நிற்கவேயில்லை

## வன்னி-கிளிநொச்சி-மன்னாரில் சாவின் விளிம்பில்

# 6 லட்சம் பேர்

சிறீலங்காவின் சிங்களப் படைகள்-புலிப்படையின் மோதலுக்கிடையில் இடம் பெயர்ந்த 6 லட்சம் மக்கள், தொழிலின்றி, வருவாயின்றி, உணவும், மருந்தும் இன்றி அனறாடம் செத்துக் கொண்டிருக்கின்றனர். இது பற்றி அங்கு நேரில் சென்று பார்த்து வந்தோர் கூறிய கண்ணீர்க் கதை வருமாறு:

வடக்கில் போரினால் சாவோர் ஒரு பக்கமென்றால் உணவு கிடைக்காததால் சாவோர் தொகை மற்றொரு பக்கம் ஒவ்வொரு நாளும் கூடிக்கொண்டு வருகிறது. இன்னொரு பக்கம் எந்த வித மருத்துவச் சிகிச்சையும் கிடைக்காமல் நோயினால் சாவோர் தொகை பன்மடங்காகிக் கொண்டு வருகிறது.

அதிலும் இடைக்காலத்தில் வவுனியாவில் குடியேறிய மலையக மக்களின் நிலைமை மிக மிகப் பரிதாபத்துக்குரியதாக மாறி வருகின்றது.

அன்றாடம் குண்டு மழை பொழியும், ஷெல்லடி விழும் யுத்த பூமியாக உள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு. வவுனியா, மன்னார் மாவட்டங்களில் ஏறத்தாழ 6 லட்சம் தமிழ் மக்கள் இன்று சாவின் விளிம்பில் தத்தளித்துக் கொண்டுள்ளனர். இவர்களில் ஒரு லட்சம் பேர் இந்திய வம்சாவளியினர் என்று சொல்லப்படும் மலையகத் தமிழர் ஆவார்கள்,

இராணுவக் கட்டுப்பாட்டுக்கு அப்பால் உள்ள வன்னிப் பகுதியிலிருந்து, இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள மன்னார் பகுதிக்கு மக்கள் குடிபெயர்வது அண்மைக்காலமாக அதிகரித்துக்கொண்டே வருகிறது. குறிப்பாக 'ஜெயசிக்குறு' நடவடிக்கையினால் பொதுமக்கள் பாவிப்பதிலிருந்து மூடப்பட்டுள்ள கண்டி-யாழ்ப்பாணம் சாலை மற்றும் வவுனியா-மன்னார் சாலை உயிலங்குளம் பகுதியூடாக இக்குடிப் பெயர்வு வேகமாக நடைபெறுகிறது.

வன்னிப் பகுதியில் இராணுவத்தின் கடுமையான குண்டு வீச்சு மற்றும் ஷெல்லடி காரணமாக உயிர் தப்ப வேறு வழியின்றி மக்கள் தமது மூட்டை முடிச்சுக்களுடன் கால்நடைகளையும் ஓட்டிக் கொண்டு மேற்கு நோக்கிக் குடிபெயர்வது அதிகரித்துக் கொண்டே வருகின்றது.

இதனால் பொதுமக்கள் மட்டுமின்றி பொதுநல ஊழியர்களும் மிகுந்த குழப்பத்திற்கும் நெருக்கடிக்கும் ஆளாகித் தவிக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

18-5-1997ல் இவ்விதம் இடம் பெயர்ந்த மக்களின் தொகை வருமாறு :

| மாவட்டம் | இடம் பெயராதோர் | உள்ளூரில் இடம் பெயர்ந்தோர் | பிற மாவட்டங்களிலிருந்து இடம் பெயர்ந்தோர் | மொத்தம் |
|---|---|---|---|---|
| (இராணுவக்கட்டுப் பாட்டில இல்லாத பகுதியில்) | | | | |
| கிளிநொச்சி | 28995 | 76431 | 126109 | 231535 |
| முல்லைத்தீவு | 86368 | 20158 | 140764 | 247290 |
| மன்னார் | 7555 | 47618 | 23776 | 78949 |
| வவுனியா | 31268 | 10089 | 38723 | 80080 |
| (இராணுவக்கட்டுப் பாட்டில் உள்ள பகுதியில்) | | | | |
| மன்னார் | 28270 | 15431 | 1845 | 15516 |
| வவுனியா | 65967 | 12603 | 6026 | 84596 |
| மொத்தம் | 248423 | 182330 | 337243 | 767996 |

கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, மற்றும் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர்கள் 22-9-1997 முதல் 29.9-1997 வரை மதிப்பீடு செய்து வெளியிட்டுள்ள தகவலின்படி—

| மாவட்டம் | இடம் பெயராதோர் | உள்ளூரில் இடம்பெயர்ந்தோர் | பிற மாவட்டங்களிலிருந்து இடம் பெயர்ந்தோர் | மொத்தம் |
|---|---|---|---|---|
| (இராணுவக்கட்டுப் பாட்டில் இல்லாத பகுதியில்) | | | | |
| கிளிநொச்சி | 28674 | 45145 | 104173 | 177992 |
| முல்லைத்தீவு | 53822 | 25949 | 155251 | 235022 |
| மன்னார் | 7890 | 21035 | 37430 | 66355 |
| வவுனியா | 3576 | 6329 | 5800 | 15705 |
| (இராணுவக் கட்டுப் பாட்டில் உள்ள பகுதியில்) | | | | |
| மன்னார் | 28910 | 15758 | 2652 | 17350 |
| வவுனியா | 62690 | 8361 | 35703 | 106754 |
| மொத்தம் | 195592 | 123677 | 341009 | 649178 |

இப்போது இத்தொகை மேலும் பெருகியிருக்கக் கூடும்

முக்கியமாக செட்டிகுளம் வட்டாரத்தில் மட்டும் 5943 பேர் இடம் பெயர்ந்துள்ளனர். 1997 பிப்வரி மாதத்தில் மேலும் 64000 மக்கள் வவுனியா வடக்கிலிருந்து இடம் பெயர்ந்திருக்கின்றனர். கடந்த 201 நாட்களில் இவர்கள் மேற்கு நோக்கி இடம் பெயர்ந்திருக்கிறார்கள். இதே காலத்தில் பெரிய தம்பனையிலிருந்து 173 குடும்பங்கள் இடம் பெயர்ந்து சென்றிருக்கின்றனர்.

இப்படி வாழ வழியற்றதன் காரணமாகவும், உயிர்ப் பாதுகாப்பின் காரணமாகவும், இடம் பெயர்ந்த மக்கள் உணவுத் தேவைகளுக்காகப் படும் துன்பங்கள் கொஞ்சநஞ்சமல்ல.

ஆனால், சிறீலங்கா அரசோ உலர் பங்கீட்டுப் பொருள்களையும், சமைத்த உணவையும் இத்தகைய மக்களுக்குத் தாராளமாக வழங்கி வருவதாக உலகை ஏமாற்றுகிறது. உண்மையிலோ அவர்களில் பெரும்பான்மையினர் பட்டினியும் பசியுமாகத் திண்டாடிக் கொண்டிருக்கின்றனர்.

சிறீலங்கா அரசின் மறுவாழ்விப்புத்துறை அமைச்சு

(14-ம் பக்கம் பார்க்க)

---

## சென்னையில் தந்தை செல்வா நூற்றாண்டு நிறைவு விழா



ஈழத்துக்காந்தி தமிழீழத்தந்தை செல்வா அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா சென்னையில் சிறப்பாக நடைபெறவுள்ளது.

தமிழக முதல்வர் தமிழினத் தலைவர்

# கலைஞர் மு.கருணாநிதி

மற்றும் அனைத்துக்கட்சித் தலைவர்களும் பங்கு கொள்கிறார்கள்.

தமிழர் ஒவ்வொருவரும் விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறோம்.

-ஈழத் தமிழர் பாதுகாப்புக் கழகம்
சென்னை-600 008.

திகதி, இடம் விரைவில் அறிவிக்கப்படும்

www.padippakam.com



"நல்லறம் எந்தை; நிறை எம்மை; நன்குணரும்
கல்வி என் தோழன்; துணிவு எம்பி-அல்லாத
பொய்ச்சுற்றத் தாரும் பொருளோ! பொருளாய
இச்சுற்றத் தாரில் எனக்கு?" -அறநெறிச்சாரம்

(நல்லறமே என் தந்தை, அறிவே என் தாய், நன்மையை உணருவதற்குக் காரணமாகிய கல்வியே என் தோழன். உள்ளத்துணிவே என் தம்பி. உயர்வுக்கு உறுதி தரக்கூடிய இச்சுற்றத்தார்போல, மற்ற தந்தை, தாய், தோழன், தம்பி போன்ற பொய்ச்சுற்றத்தார் உறுதி தருவார்களோ? தரமாட்டார்கள். [அறம், நிறை, கல்வி, துணிவு ஆகியவையே எவருக்கும் நன்மைதரக் கூடிய உண்மையான சுற்றத்தார் ஆவார்கள்) எந்தை-எம்தந்தை, நிறை-அறிவு, தகுதியுமாம், எம்மை-எம் அம்மை, எம்பி-எம் தம்பி]

# தெளிவு

## இந்திய ஜனநாயகம் இடர்நீக்கி வெல்லும்!

12-வது இந்தியப் பாராளுமன்றத் தேர்தல் நடந்து முடிந்துவிட்டது.

உலகின் மிகப் பெரிய ஜனநாயகமான இந்திய ஜனநாயகம் மீண்டும் தன் ஜனநாயகப் பண்பை உலகிற்கு நிரூபித்து விட்டது.

வெற்றிபெற்ற அனைவரையும் மனமார வாழ்த்துகிறோம். வெற்றிவாய்ப்பை இழந்தவர்களுக்கும் அவர்கள், ஜனநாயக மரபுகள் வெற்றிபெற உதவியமைக்காக உளமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஜனநாயகத் தேர்தல்களில் ஏற்படும் வெற்றி தோல்விகள் விளையாட்டுக் களங்களில் ஏற்படும் வெற்றி தோல்விகளுக்கு ஒப்பானவையானதால், இரண்டையும் சமமாகப் பாவிக்கும் மனப்பக்குவம் விளையாட்டு வீரர்களைப் போலவே அரசியல் வாதிகளுக்கும் இருப்பது அவசியமாகும்.

இந்தப் போட்டியில் இல்லையென்றால் என்ன? அடுத்த போட்டியில் வெற்றி நமதே! என விளையாட்டு வீரர்கள் நம்பிக்கையுடன் உழைப்பதைப் போலவே இத் தேர்தலில் இல்லையென்றால் என்ன? அடுத்த தேர்தலில் வெற்றி நமதே என்று அரசியல்வாதிகளும் தேர்தல் வெற்றி தோல்விகளை இலேசாக எடுத்துக் கொள்வார்கள் என்றால், பிறகு எவ்வித வெறுப்புணர்ச்சியும் விரோத குரோதங்களும் நாட்டில் இருக்க மாட்டா.

இந்திய நாட்டைப் பொறுத்தவரை அதன் நாடாளுமன்றத் தேர்தல் ஜனநாயகம் பொன்விழாவை நோக்கி வெற்றி நடை போட்டுக்கொண்டிருப்பதைக் கண்டு உலகமே பாராட்டுகின்றது.

ஆம்; சுதந்திரப் பொன்விழாவை இதந்தரும் முறையில் 1997ல் கொண்டாடிய இந்தியப் பெருநாடு, தனது பாராளுமன்ற ஜனநாயகப் பொன்விழாவையும் கி. பி. 2002ல் கீர்த்திமிகு வகையில் கொண்டாடும் என்பதில் ஐயமில்லை.

தனியொரு கட்சி ஆட்சியானாலும். பல்வேறு கட்சிகள் இணைந்த கூட்டணியாட்சியானாலும், மக்கள் ஆட்சி என்பது மற்ற ஆட்சி முறைகளைப் பார்க்கிலும் மதிப்புயர்ந்ததே யாகும். சில நேரங்களில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத நிலை இதில் உள்ள ஒரு பலவீனமானாலும், கூட்டணி ஆட்சி தவிர்க்க முடியாது என்கிற கட்டாயம் வருகிறபோது அதைச் சமாளித்துக் கொண்டு மேலெழும் ஆற்றல் தானே தோன்றிவிடும்.

ஒரு காலத்தில் பிரான்சிலும், இத்தாலியிலும் இது போன்ற நிலைமை ஏற்பட்டு, அதாவது பாராளுமன்றத்தில் எந்தக் கட்சிக்கும், எந்தக் கூட்டணிக்கும் அறுதிப்பெரும்பான்மை கிடைக்காத குழப்பம் ஏற்பட்டு, அடிக்கடி ஆட்சி மாற்றம் ஏற்படுவதும், மக்கள் அடிக்கடித் தேர்தல்களைச் சந்திக்க வேண்டிய சோதனை ஏற்படுவதுமான குழப்ப நிலை உருவானாலும், அதனால் தோன்றிய பக்குவநிலை, அக்குழப்ப நிலையைத் தாண்டி நிலையான ஆட்சியை நிகழ்த்திச் செல்லும் ஆற்றலை அங்கு உண்டாக்கிவிட்டதைக் காண்கிறோம்.

அதுபோன்று இந்த 12-வது பாராளுமன்றத் தேர்தலின் முடிவில் எக்கட்சிக்கும், எக்கூட்டணிக்கும் அறுதிப்பெரும்பான்மை கிடைக்காததால் ஒரு குழப்ப நிலை இந்தியாவில் ஏற்பட்டதென்றாலும், இதையும் சமாளித்து மேலெழும் பாங்கு இந்திய ஜனநாயகத்திற்கு நிரம்பவே இருக்கிறது.

ஏனெனில், இந்தியாவின் அண்டை நாடுகள் பலவற்றில் அடிக்கடி இராணுவ ஆட்சி ஏற்பட்டும், இந்தியாவில் அந்தப் பாதிப்பு ஏற்படாததே இந்திய ஜனநாயகத்தின் உயர்வுக்குச் சான்றாகும். அந்த உயர்வு இந்த பெரும்பான்மைப் பிரச்சினையையும் சமாளித்து, புடம்போட்டு எடுக்கப்பட்ட தங்கமாக மிளிரும் என்பதிலும் ஐயமில்லை.

ஐயப்பாடில்லாத அந்த உள்ளத்தோடு இத்தேர்தலில் வெற்றி பெற்ற உறுப்பினர்களுக்கும், வெற்றி வாய்ப்பை இழந்தவர்களுக்கும் 'ஈழசுதந்திரன்' மீண்டும் மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

இந்திய சுதந்திரத்தில்" எதிரொலியாகவே இலங்கை போன்ற நாடுகளுக்கும் சுதந்திரம் கிடைத்தது. அது போல் இந்திய ஜனநாயகத்தின் உறுதிப்பாட்டினால், எமது ஈழத் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கும் வழிபிறக்கும் என்று நம்புகிறோம். அந்த நம்பிக்கையோடு இந்திய ஜனநாயகத்தையும் போற்றுகிறோம்.

# கல்வியைத் தொடர முடியாத யாழ். மாணவர்க்கு கனடா அரசு நிதி உதவி

மாணவ சமுதாயம் கல்வித் துறையில் கவனம் செலுத்துவதன் மூலமே வளமான எதிர்காலத்தை உருவாக்கமுடியும். எனவே தான் தமது கல்வி போதனையினைத் தொடர முடியாது, அவதியுறும் மாணவர்களின் நலன் கருதியே இவர்களுக்கான உதவியினை வழங்க கனடிய அரசு முன் வந்துள்ளது. இதன் பிரகாரம் யாழ்ப்பாணத்தில் தமது கல்வி போதனையினைத் தொடர்வதில் அவதியுறும் மாணவர்கட்கு உதவிடும் வகையில் 3.347 மில்லியன் ரூபாவினை வழங்கவுள்ளோம். இந்த இரு வருட காலத்தில் 6200 மாணவர்கள் இதன் மூலம் பயனடைய முடியும் என இலங்கையிலுள்ள கனடிய தூதரக அபிவிருத்திப் பணிகளுக்குப் பொறுப்பான அதிகாரி மாணி கிர்வான் கூறினார்.

மேற்படி திட்டத்திற்கான காசோலையினை வடக்கு கிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ். டி. வகலாலாவிடம் கையளித்து இவர் உரையாற்றினார்.

### இலங்கை-கனடா பாரம்பரிய உறவு

மாகாண கல்வியமைச்சு பணிமனையில் இந்த நிகழ்வு இடம் பெற்றது. மேற்படி தூதரக அபிவிருத்தி ஆலோசகர் சர்வம் கைலாசபதியும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டார்.

தூதரக அபிவிருத்தி அதிகாரி மாணி கிர்வான் அங்கு தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்-

இலங்கைக்கும் கனடாவிற்கும் இடையிலான தொடர்புகள் நீண்ட பாரம்பரியம் கொண்டனவாகும். 1956ம் ஆண்டு கொழும்புத் திட்டம் உருவான காலத்திலேயே இந்த உறவுகள் பலமடைந்திருந்தன. கனடாவைப் பொறுத்தவரை அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலமாகவும் பயனுள்ள பணிகளை நாம் மேற்கொண்டு வருகின்றோம். இன்றைய நிலையில் எமது கல்வி போதனையினை தொடர நாம் வழங்கும் உதவி பயனுடையதாகும் என்றே நம்புகிறேன்.

இதன் மூலம் ஆகக்கூடிய உச்ச கட்ட பயனைப் பெற வேண்டும் என்றார்.

### 6200 மாணவர்கட்கு பெறும் பயன்

திட்டத்திற்கான காசோலையினைப் பெற்றுக் கொண்ட மாகாண செயலாளர் எஸ். டி. வகலாலா அங்கு உரையாற்றுகையில்-

யாழ் மாநகரின் மிக முக்கியமான கல்வி அபிவிருத்தித் திட்டத்திற்கு கனடிய அரசு வழங்கும் இந்த உதவிக்கு திட்ட அபிவிருத்தி அதிகாரி மாணி கிர்வான் அபிவிருத்தி ஆலோசகர் சர்வம் கைலாசபதி ஆகியோருக்கு நாம் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம். யாழ் மாவட்டத்தில் உள்ள மாணவர்களின் கல்வி நிலை கருதி வழங்கப்பட்ட இந்த உதவி காலத்தின் தேவையறிந்து செய்யப்பட்ட உதவியாகும்.

யாழ் மாநகரில் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மாணவர்கள் தமது வறுமை நிலையின் காரணமாக பாடசாலை செல்லமுடியாத நிலை இருந்து வந்துள்ளது. இத்திட்டத்தின் பிரகாரம் 1998இல் 3200 மாணவ மாணவிகளும் 1999 ஆம் ஆண்டில் 3000 மாணவர்களும் பயனடையவுள்ளனர். குறிப்பாக கனடிய சர்வதேச அபிவிருத்தி ஏஜென்சி பாதிக்கப்பட்ட மாணவர்கள் கணிதம், விஞ்ஞானம், சமூகக் கல்வி, ஆங்கில பாடங்களில் சிறப்புற இத்தகைய உதவிகள் வழங்கப்படவுள்ளன.

சுமார் 130 பாடசாலைகளில் பயிலும் 6200 மாணவர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைவர் எனவும் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ். கந்தசாமியும் உரை நிகழ்த்தினார்.

# யாழ். பயணிகள் கப்பல் சேவை ஆரம்பமாகும் அறிகுறி இல்லை

யாழ் குடாநாட்டுக்கான பயணிகள் கப்பல் சேவையினை விரைவில் ஆரம்பிக்கக்கூடிய சூழ்நிலை தற்போதைக்கு இல்லை என அத்தியாவசிய சேவைகள் திணைக்களத்தின் மேலதிக செயலாளர் எம்.ஐ. ரபீக் தெரிவித்தார்.

குடாநாட்டுக்கான பயணிகள் கப்பல் சேவைக்கென பல கப்பல் கம்பெனிகளிடம் கேள்விப்பத்திரம் கோரப்பட்ட போதும் வட பகுதிக்கான சேவையில் ஈடுபடுவதற்கு எந்த கப்பல் கம்பெனிகளும் முன்வரவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

கடற்படைக்கு சொந்தமான இரண்டு தரையிறங்கு கப்பல்களை புலிகள் பருத்தித்துறைக் கடலில் கடந்தவாரம் தாக்கி மூழ்கடித்ததினால் பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிப்பது மேலும் பின்னடைந்துள்ளது. அத்துடன் பயணிகள் கப்பலுக்கு பாதுகாப்பு வழங்குவது மேலும் சிக்கலாகி உள்ளது என பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதே வேளை யாழ் குடாநாட்டுக்கு கப்பல் மூலம் செல்வதற்காக மன்னாரில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் தொடர்ந்தும் காத்திருக்கின்றனர். அகதி முகாம்களில் தங்கியிருக்கும் இவர்கள் அடிப்படை வசதிகள் இன்றி பெரும் கஷ்டப்பட்டு வருகின்றனர் எனத் தெரியவருகிறது.

### குஞ்சுக்குளம் பகுதியில் புலிகள் படையினர் பீரங்கி தாக்குதல்

ஓலுமடு பகுதியில் படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் நடந்த மோதலில் மூன்று புலிகள் கொல்லப்பட்டனர். மாங்குளம் தென்மேற்கில் உள்ள குஞ்சுக்குளம் பகுதியில் படையினரும் புலிகளும் பீரங்கி, மோட்டார் தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர்

(13ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

## வாசகர் நெஞ்சம்

அன்புள்ள ஆசிரியரே,

''யாழ்ப்பாணத்தில் சந்திரிகா நடத்திய உள்ளூராட்சித் தேர்தல் உலகை ஏமாற்றும் நாடகமே'' என்ற தலைப்பில் வெளியாகியிருந்த ஈழத்தமிழர் பாதுகாப்புக் கழகத்தின் அறிக்கை உண்மையின் சங்கநாதமாகும். அத்தேர்தலில் கலந்துகொண்ட தமிழ்க்கட்சிகள் அந்நாடகத்திற்குத் துணைபோன வேடதாரிகள் என்பதையும் எடுத்துக் காட்டியிருந்தால் இன்னும் பொருத்தமாக இருந்திருக்கும்.

என். கே. வேலும்மயிலும், இராமநாதபுரம்

ஈழத்துக்காந்தி தந்தை செல்வாவுடைய வாழ்க்கை வரலாற்றுத் தொடர் ஆரம்பித்திருப்பதை வரவேற்கிறோம், ஆனால் எதையும் மங்கலத்தோடு தொடங்கவேண்டும் என்பது தமிழ் மரபாகும். இத்தொடரோ, தந்தையின் இறுதி யாத்திரையோடு தொடங்கப்பட்டுள்ளது ஏன் என்று விளங்கவில்லை.

புலவர் சாத்தன், சென்னை-33

''ஈழத்தந்தை நூற்றாண்டு நிறைவுவிழா'' என்ற தலைப்பிலான ஆசிரியத் தலையங்கத்தில் ''தமிழீழ விடுதலை சாத்தியப்பட தமிழீழத்தந்தையின் நெறிமுறைகளைக் கடைப்பிடிப்பதும் இன்றியமையாததாகும்'' என்பது சத்தியமான வார்த்தை. அந்தநெறி முறைகளில் இருந்து விலகியதே இன்றைய ஈழத்தமிழரின் இரங்கத்தக்க நிலைக்கு முதற்காரணம்.

V. S. கோணேஸ்வரன், மதுரை-1

''புலிகள் மீதான அமெரிக்கத்தடையின் உள்நோக்கம் என்ன?'' என்ற சிங்களக் கட்டுரையின் தமிழாக்கம், சர்வதேச அளவிலும் சிங்களப் பேரின்வாதம் தனது சூழ்ச்சிகளை விரிவுபடுத்தியிருப்பதையே உணர்த்துகிறது.

என். பி. வீமராஜா, புதுவை-4

அலோசியசின் ''அன்பின் பாலம்'' குறுங்கதையும், எஸ். சுபாஷின் ''கன்மலையின் சுவடுகள்'' சிறுகதையும் நன்றாக உள்ளன. அதிலும் சுபாஷின் எழுத்து நடை நெஞ்சைத் தொட்டது

ஏ. கே. புவனாதேவி, குடியாத்தம்

'இலங்கைத் தாயிடம் ஒரு ஈழமைந்தனின் கோரிக்கை' என்ற சு. சிவாவின் கவிதை படிக்கும்போதே என்னைக் கண்ணீர் விடவைத்துவிட்டது. தகவல் தொடர்பு- தலைமைத்துவம் பற்றி பரமேஸ்வரியும், உமாவும் எழுதிய கவிதைகளும் நன்றாக உள்ளன. ஈழவாகினியின் ''எரிமலை வெடித்தது உள்ளத்தின் ஓரம் எழுந்தது நெஞ்சில் புதிய வீரம்'' என்ற கவிதை வரிகள் என்நெஞ்சில் நிலை குத்திவிட்டன.

பி. ஆர். கபிலசுப்பிரியன், மாலாமதுரை,

'அறிவியல் பகுதி' எனும் புதிய பகுதியை ஈழசுதந்திரனில் கண்டேன். அதில் ''தகவல் தொடர்பு மற்றும் தலைமைத்துவப் பயிற்சி'' என்ற பாடம் தொடங்கியிருப்பதைப் பார்த்து மகிழ்ந்தேன். ஈ. ஏ. ம. க. நடத்தும் இத்தகைய வகுப்புகளில் கலந்துகொள்ள முடியாதவர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாகும்.

சு. பரமநாதன், புதுக்கோட்டை

'அறிவியல்' பகுதியில் வீரமாமுனிவரைப் பற்றிய கட்டுரை புல்லரிக்க வைத்தது. நம் தமிழின் மகிமை அறிந்து ஒரு இத்தாலிக்காரர் இந்த அளவுக்குத் தமிழ்த்தொண்டு புரிந்திருப்பது வியப்பளிக்கிறது.

இரா. கணபதி, கோவை-11

'ஒருகுறளை உணர்வோம்' பகுதியில் குறள்கூறும் இயல்புடைய மூவர் யாவர் என்பதை அருகோ விளக்கியிருந்த பாங்கு புதியதாகவும், பொருத்தமாகவும் இருந்தது.

பாவலர் ஏசுவடியான், வேலூர்-4

### ''ஈழசுதந்திரன்''
### மாத இதழ் சந்தா விபரம்

ஓராண்டு சந்தா இந்தியாவில் ரூ. 30-00
வெளிநாடுகளில் அமெரிக்க டொலர் 10
அல்லது பிரிட்டிஷ் பவுண்ட் 6

ஈழ சுதந்திரனுக்கு வெளிநாடுகளில் சந்தா சேர்த்தனுப்ப முன்வருவோர் தொடர்பு கொள்ளலாம்.

நிர்வாகி
**ஈழசுதந்திரன்**
14, சேட் காலனி முதல் தெரு,
மூன்றாம் மாடி
எழும்பூர், சென்னை-8.

# வடக்கிலிருந்து தாக்குமுனை கிழக்கிற்கு செல்கிறது!

## பி.பி.சி.யின் கணிப்பு!!

இலங்கையில் கிழக்குப் பகுதியில் உள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திரிகோணமலைத் துறைமுகத்தின் மீது தமிழ் புலிப் போராளிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதல் ஒன்று தோல்வியில் முடிந்திருக்கிறது என்று இராணுவ அதிகாரிகள் கூறுகின்றார்கள்.

கடற்படையின் ரோந்துப் படகுக்கு அருகே தமிழ்ப் புலிகள் எனச் சந்தேகிக்கப்படுவோர் தம்முடைய படகு ஒன்றை வெடித்தார்கள் என்றும் இதில் இரண்டு கடற்படை வீரர்கள் காணாமல் போயுள்ளார்கள் என்றும் அமைச்சகம் தெரிவித்துள்ளது. புலிகள் தரப்பிலிருந்து இது குறித்து தகவல்கள் எதுவும் இல்லை.

### தற்கொலைப் படகு தாக்குதல்

தமிழ் புலிகளுக்குச் சொந்தமானது எனச் சந்தேகிக்கப்படும் இந்தப் படகை திருகோணமலைத் துறைமுகத்திற்கு வெளியே கடற்ரோந்துப் படகு ஒன்று கண்டது. விரைந்து செல்ல வல்ல அந்தப் படகில் வெடிப்பொருட்கள் நிறைத்து வைக்கப்பட்டிருந்தது எனவும் திருகோணமலைத் துறைமுகத்திற்குள் அது நுழைய முயன்றது எனவும் பாதுகாப்புத் துறை அமைச்சர் கூறுகின்றார். அந்தப் படகு உண்மையில் எதை இலக்காகக் கொண்டு வந்தது எனக் தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் திருகோணமலைக் கடற்படையின் வீரர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது, அந்தப் படகு வெடித்துச் சிதறியது என்ற பாதுகாப்பு அமைச்சு, அந்த வெடிச் சம்பவத்தில் கடற்படையின் ரோந்துப் படகு மோசமாகச் சேதம் அடைந்துள்ளது எனவும் தெரிவித்திருக்கின்றது. கடற்படை வீரர்கள் ஐவர் மீட்கப்பட்டார்கள். ஆனால் இருவர் காணாமல் போயிருக்கின்றார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### பதிலடித் தாக்குதல்

அத்துடன் திருகோணமலைக்கு வடக்கே நடந்த கடற்போரில் தமிழ்ப் புலிகளில் 7-பேரைக் கொன்றதாகவும் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் புலிகளின் வானொலியோ தமது போராளிகளில் இருவர் மட்டுமே கொல்லப்பட்டார்கள் எனக் கூறியுள்ளது. தற்போது நடத்தப்பட்டுள்ள இந்தத் தாக்குதல் பதிலடித் தாக்குதலாக இருக்கக் கூடும் என நம்புகிறார்கள். சென்ற மாதத்தில் தமிழ்ப் புலிகள் மேற்கொண்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் கடற்படையின் இரண்டு கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டதுடன் கடற்படையினரும் இராணுவத்தினருமாக 27 பேர் காணுமல் போனார்கள். வடபுல யாழ்ப்பாணக் குடா நாட்டிற்குப் பொருட்களை எடுத்துச் செல்வதில் கிழக்குக் கரையோரத்தில் உள்ள கடற்படையினர் முக்கிய பங்கு ஆற்றுகின்றார்கள். யாழ்ப்பாணம் அரசுப் படையின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கிறது என்றாலும் இலங்கையின் மற்றப் பகுதித் தொடர்புகள் புலிகளின் கட்டுப்பாட்டினால் நிலத்தால் துண்டிக்கப்பட்டுள்ளன.

இதனால் கடல் மார்க்கமாக அல்லது விமான மூலம் ஆக மட்டுமே அங்கு சென்றடையும் பொருட்களை எடுத்துச் செல்லக் கூடியதாகவும் உள்ளது. புலிகளும் தமது போராளிகளை ஒரு இடத்திலிருந்து அழைத்துச் செல்ல கிழக்குக் கரையோர கடற்பரப்பையே பயன்படுத்துகின்றார்கள். அரசாங்கப் படை வீரர்கள் யாழ்ப்பாணக் குடா நாட்டைப் பெரும் நிலப்பரப்பில் தமது கட்டுப்பாட்டில் உள்ள நிலப்பரப்புடன் இணைக்கும் சாலையைத் திறப்பதற்கான இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்கிறார்கள். இருப்பினும் அங்கு ஒரு முட்டுக்கட்டை நிலை ஏற்பட்டிருப்பது போல் தெரிகிறது அத்துடன் இப்போதைக்கு அனைவரது கவனமும் கிழக்கில் ஏற்பட்டுள்ள வன்முறைகளிலேயே குவிந்து இருக்கிறது.

இவ்வாறு பி.பி.சி. தனது 11-3-98 ஒலிபரப்பில் கூறியுள்ளது.

# இந்திய பத்திரிகையாளருக்கு எதிரான போலிசார் போக்கு

## இலங்கை 'எடிட்டர் கில்ஸ்' கண்டனம்

இலங்கைப் பத்திரிகையாளருக்கு எதிரான நடவடிக்கைகளைப் பற்றி மட்டும் எடிட்டர் கில்ஸ் கவலையைத் தெரிவித்துள்ளது. இந்தியப் பத்திகையாளர் சிலரும் துன்புறுத் தப்பட்டிருக்கிறார்கள். இதை அவர்கள் ஏன் கண்டனம் செய்யவில்லை என்று பி.பி,சி. நிருபர் கேட்டபோது,

வெளிநாட்டுப் பத்திரிகையாளருக்குச் சங்கம் இருந்கின்றது. அந்த வெளிநாட்டுப் பத்திரிகையாளர் சங்கம் அது தொடர்பாகப் அதிகாரிகளைச் சந்தித்து அதன் குறைபாட்டைத் தெரிவித்திருந்தது. அந்தச் சங்கத்தினுடைய நடவடிக்கையை இறுதிவரை எதிர்பார்த்து நாங்கள் இருந்தோம்.

### போலீஸ் இராஜ்யம்

இந்தியப் பத்திரிகையாளர்கள் பலர் துன்புறுத்தப்பட்டிருக்கின்றார்கள். இதற்கு எடிட்டர் 'கில்ஸ்' கண்டனம் தெரிவித்து இருக்கின்றதா?

ஏற்கெனவே ஒரு அமைப்பு வெளிநாட்டுப் பத்திரிகையாளருக்கான அமைப்பு இந்த விசயத்தில் தலையிட்டு புதிய நடவடிக்கைகள் எடுத்திருப்பதால் அதற்கான அவசியம் இப்போது எடிட்டர் கில்சுக்கு எழவில்லை என்பது தான் எமது அபிப்பிராயம்.

பத்திரிகையாளர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் நாட்டை ஒரு பொலிஸ் இராஜ்யமாக மாற்றக் கூடிய அபாயத்தைச் சுட்டிக் காட்டுகிறது. இதைத் தடுக்க ஏதாவது தீர்மானம் நிறைவேற்றினீர்களா?

### ஒன்று திரண்டு உழைப்போம்

கடந்த சில மாதங்களாக நாங்கள் இதை நிர்வாகபொது ஜனத் தொடர்புக்கான அமைச்சர் அவர்களிடமும் அதிகாரிகளிடமும் பத்திரிகையாளர்களுக்கு எதிரான நட நடவடிக்கைகள் பற்றி முறையிட்டு இருக்கின்றோம். அவர்கள் உரிய நடவடிக்கைகள் எடுப்பதாகச் சொல்லி இருக்கின்றார்கள். சில சமயங்களில் கண்டும் காணாமலும் இருந்து விடுகின்றார்கள். இதைச் சுட்டிக் காட்டுவதற்காகத் தான் இப்பொழுது ஒன்று திரண்டு உழைத்து வருகின்றோம்.

இவ்வாறு பி.பி.சி. நிருபர் கேட்ட கேள்விகளுக்கு கொழும்பு 'வீரகேசரி' இதழாசிரியரும், எடிட்டர் 'கில்ஸ்' உறுப்பினருமான செல்லையா நடராஜா பதிலளித்துள்ளார்.

# ஐ. தே. க. செயற்குழு

இனப்பிரச்சினை தொடர்பாக ஐ.தே.க. தயாரித்துள்ள மாற்று யோசனைகள் ஐ.தே.க. ஆதரவாளர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்செயல்கள் பற்றி இக்கூட்டத்தில் ஆராயப்பட்டதுஎனத் தெரிய வருகிறது.

www.padippakam.com



மகளிர் மேம்பாட்டுக்கு வழி என்ன?

# ஈ.ஏ.ம.க.வின் மகளிர் தினக் கொண்டாட்டத்தில் கருத்துரைகள்

ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தின் மகளிர் பிரிவு சார்பாக சர்வதேச பெண்கள் தினம் 7-3-1998 அன்று முதன் முறையாகவும், விமரிசையாகவும் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சி, தமிழ்ப்பண் மற்றும் கழகப் பாடலுடன் ஆரம்பமானது.

இவ்விழாவில், கழகச் செயலாளர் செல்வி சூரியகுமாரி தலைமையில் டாக்டர் சாந்தி மற்றும் பாண்டிச்சேரி தியாக ஒளி சபையைச் சேர்ந்தவரும், அகதிகள் நலப் பணியாற்றும் அருட்சகோதரி அல்போன்ஸ் அவர்கள் கலந்து கொண்டதுடன்: முகாம் சமுதாயத்தில் வாழும் மாதர் சங்கப் பெண்கள், ஆசிரியைகள், நலப்பணியாளர்கள் மற்றும் கழகத்தில் பணியாற்றும் பெண்கள் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

இவ்விழாவைத் தலைமை ஏற்று நடத்திய செயலாளர் சூரியகுமாரி கூறியாதவது :

பெண்கள் ஆண்களுக்குக் குறைந்தவர்கள் அல்ல. அவர்கள் ஆண்களைப் போல உழைத்து முன்னேற்றத்தைக் காணவேண்டும். இதற்குப் பெண்கள் உரிய தகைமை பெற்றிருக்க வேண்டும் எனத் தெரிவித்ததுடன் பெண்கள் தன்னம்பிக்கை கொண்டவர்களாயும் மாறவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

பெண்கள் ஒதுங்கி வாழ்வது விரும்பத் தக்கதல்ல. பெண்ணின் சுய அபிப்பிராயங்களை எந்தவிதமான தாமதங்களும் இல்லாமல் வெளிக் கொணர்ந்து கலந்துரையாடல்களில் பங்கு பற்றிப் போதிய அனுபவத்தைப் பெறமுயற்சிக்க வேண்டும். ஆண்களைப் போலப் பெண்களும் நிர்வாகச் சேவைகளில் சேர்ந்து திறம்படச் சேவையாற்றப் பின் நிற்காது முன்வர வேண்டும். மேலும் பெண்கள் ஆண்களினும் பார்க்க எங்களோடு பழகுவதில் அன்பு, பாசம், பொறுமை, பரந்த நோக்குடன் செயல்படுதல் போன்றவை அதிகமாகவுள்ளதால், ஒரு சேவையை பண்ணியாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு அதிக வாய்ப்புண்டு என்பதால் சேவையைத் திறம்படச் செய்யலாம் என்பது உறுதியானது எனக் கூறினார்.

மேலும் பேசும் போது: பணியாளர்கள் பெண் அதிகாரிகளோடு பழகும் போது, தனி மதிப்புக் கொடுத்துச் செயல்படுவதையும் நாம் அறிவோம் எனவே, பெண்களாகிய நாங்கள் பணியாளர்களாகப் பழகும் போதும் அவர்கள் எமக்குத் தரும் நன் மதிப்பைக் கெடுத்துவிடக் கூடாது என்றும் கூறினார். அடுத்த வருடம் இதே தினத்தில் மகளிர் அமைப்புக் கூட்டத்தைக் கூட்டும் பொழுது எங்களின் பெரும்பாலானவர்களுடைய முன்னேற்றத்தைக் காணுவதற்குப் பொருத்தமாக உங்களால் இயன்றளவு பல கோணங்களிலும் கவனம் செலுத்தி, தன்னம்பிக்கையையும், வளர்ச்சியையும் அடைய வேண்டும். எனக் கூறினார். அவர் கூறிய சில கருத்துக்கள் பின் வருமாறு:

### அதிகாரம்-தகைமையின் கூறுகள்

ஒரு பெண் என்ன செய்ய விரும்புகிறார் என்பதைப் புரிந்துக் கொண்டு தனது எண்ணங்களையும் உறுதிப் பாட்டையும்போட்டியிடும்தன்மையையும் வளர்த்துக் கொள்ளும் நடைமுறையே அதிகாரம் தகைமைப்படுத்திக் கொள்வதாகும். இதனைக் கீழ்க்காணுமாறு காணலாம்.

| நான் இதனைச் செய்திட விரும்புகிறேன் (தூண்டுகை) | என்னால் முடியும் ஊக்குவிப்பு | இதனைச் செய்து முடிப்பேன் (தகைமை) |
|---|---|---|

மகளிருக்கே அதிகாரம் என்ற தலைப்பில் சில கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப் பட்டன. முதலில் கூச்சத்தை அகற்றுதல் என்ற தலைப்பின் கீழ் அங்கு வருகை தந்திருந்தவர்கள் அனைவரையும் தம்மை தாம் அறிமுகம் செய்து கொள்ளும்படி கூறினார், கலந்து கொண்ட அனைவரும் தங்களைத் தாங்கள் அறிமுகம் செய்து கொண்டார்கள். நம்மிடையே கூச்ச சுபாவம் இருப்பதனால் பல விடயங்களில் நாம் பின் தங்கிய நிலையில் இருக்க வேண்டி உள்ளது. இந்நிலை மாற்றப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

### மகளிருக்கே அதிகாரம் என்பது:

- கூச்சத்தை அகற்றுதல்
- உறுதிப்பாட்டுடன் பேசுதல்-செயல்படுதல்
- கவுரவத்துடன் கூடிய தற்பார்வை.
- தன்னுடைய திறமைகளையும் வரையறைகளையும் அறிந்து கொள்ளுதல்.
- தடைகளைத் தகர்த்தெறிதல்.
- அபிலாசைகளை அறிந்து கொண்டு அவற்றை லட்சியங்களாக மாற்றுதல்.
- தனக்கு வேண்டிய திறமைகளைப் பெறமுடியுமென அறியச் செய்தல்.
- லட்சியங்களை எட்ட மனவலிமையை வளர்த்துக் கொள்ள உதவுதல் ஆகியவையாகும்.

### அதிகாரம்-தகைமையை வயப்பட வைக்கும் தடைப்படுத்தும் பட்டியல்

| வயப்படுத்துபவை | தடைப்படுத்துபவை |
|---|---|
| நேர்மறையான தற்சார்பு | எதிர்மறையான தற்சார்புக் குறைவு |
| திண்ணிய எண்ணம் | பலவீனமான எண்ணம் |
| சுயதிறனை அறிந்திருத்தல் | சுய திறனை அறியாதிருத்தல் |
| தற்சார்பு | பிறரையே சார்ந்திருத்தல் |
| முற்படுதல் | பின்னடைவு |
| உச்ச அளவு தூண்டுகை | தூண்டுகைக் குறைபாடு |
| சுய உணர்வுகள் உணர்ச்சிகளை புரிந்து விழிப்போடிருத்தல் | சுய உணர்வுகள் உணர்ச்சிகள் குறித்து அறியாதிருத்தல். |

அருட் சகோதரி பேசுகையில், முகாமில் குடும்பங்களிடையே, அதாவது தணவன் மனைவி, இருவருக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் காணப்படுவதால், குடும்பப் பிரச்சினைகளாகத் தோன்றி, குழந்தைகளைப் பாதிக்கும் நிலை உருவாகின்றது. இதனைத் தடுத்து இது போன்ற குடும்பங்களை நல் வழிப்படுத்த அவசியம்ஆற்றுப் படுத்தல் தேவையாகயுள்ளது. இதனைக் கருத்திற் கொண்டு இன்றைய தினத்தில் இருந்து இதனை ஒருசவாலாக ஏற்றுக் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

இதனைத் தொடர்ந்து டாக்டர் சாந்தி இராசசுந்தரம் பேசுகையில் முகாம் சமுதாயத்தில் பெண்கள் அனைவரும் ஒற்றுமையுடன் இணைந்தால் தான் எந்தச் சேவையையும் சிறப்பாகச் செய்யலாம். இச் சந்தர்ப்பத்தில் முகாம் மக்கள்

(11-ம் பக்கம் பார்க்க)

# மருத்துவ வினாக்களும் பொருத்தமான விடைகளும்

## சமுதாய அடிப்படையிலான மறுவாழ்வு

**-டாக்டர் சுப்பிரமணியம் நடராசா-**

(சென்ற 1997 நவம்பர் இதழில் இடம் பெற்ற கருத்துரைக்ளின் தொடர்ச்சி)

16. சமுதாய மட்டத்திலான மறுவாழ்வுக் குழுவை முகாமில் அமைக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை எவை?

இக்குழுவின் உறுப்பினர்களாயிருப் போர், தொண்டுள்ளம் கொண்டவராயும் விடாமுயற்சியுடன் பணியாற்றக் கூடியவர்களாயும் இருக்கவேண்டும். இவர்கள் புதிய விடயங்களை அறிவதிலும், கற்பதிலும் ஆர்வம் உள்ளவர்களாயும், சமூகத்தில் மரியாதை உள்ளவர்களாயும் நம்பிக்கையூட்டுபவர்களாயும் இருக்க வேண்டும். நலப்பணியாளர் இக்குழுவின் ஒருங்கிணைப்பாளராக செயற்படவேண்டும்.

17. இக்குழு உறுப்பினர்கள் எண்ணிக்கையில் கட்டுப்பாடு தேவையா? ஏன்? ஏனெனில், அதிகளவு உறுப்பினர்களை ஒன்று சேர்ப்பது கடினம். அதிகளவானோர் பங்கேற்கும் போது கருத்து வேறுபாடுகள் அதிகரித்து செயற்பட முடியாமல் போகலாம். ஆர்வம் உள்ள குறைந்த எண்ணிக்கையுள்ளோர், வசதிக்கேற்றவாறு தமது பணிகளை புரிந்துணர்வுடன் பகிர்ந்து செயற்படலாம். தொண்டார்வத்துடன் செயற்படுவதே இக்குழுவின் முக்கிய நோக்கமாகும்.

18. இந்தக் குழுவினர் செயற்பட சில வழிமுறைகளை கூறவும்:

இக்குழுவினர் இருவாரங்களுக்கு ஒருமுறை கூடிக் கலந்துரையாட வேண்டும். இக்கலந்துரையாடலின் போது, முகாமில் உள்ள பிரச்சினைகள், தீர்வுகள் செய்யப்பட்ட பணிகள் பற்றிப் பேசலாம். கூட்டத்தில் பேசப்படுபவற்றை குறிப்பெடுத்து வைத்துக்கொள்ள வேண்டும். அத்துடன் செய்யப்பட வேண்டிய பணிகளுக்கு ஒரு காலஅட்டவணை தயாரித்துக்கொள்ள வேண்டும். குழுவினர் தமக்குரிய பணிகளைப் பகிர்ந்து செய்ய கொள்ளவேண்டும். இவற்றை ஒருங்கிணைக்கும் பணியை நலப்பணியாளர் செய்ய வேண்டும்.

19. இந்தக்குழுவினர் எவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்துச் செயற்பட வேண்டும்?

இவர்கள் முதல் நிலைத்தடுப்பு முறைகள்.
இரண்டாம் நிலைத் தடுப்பு முறைகள்.

மூன்றாம் நிலைத்தடுப்பு முறைகள் என்பவற்றிற்கு முக்கியத்துவம் அளித்துச் செயற்படவேண்டும்.

20. முதல் நிலைத் தடுப்பு முறைகள் என்றால் என்ன?

நோய்களோ, ஊனங்களோ, புதிதாகத் தோன்றாமல் தடுக்கவும் அல்லது அவை ஏற்படும் வாய்ப்பைக் குறைக்கவும் எடுக்கப்படும் நடவடிக்கைகளை முதல்நிலைத் தடுப்பு முறைகள் எனக்கூறலாம் உதாரணமாக கர்ப்பிணிகளுக்கு ஏற்படும் ஊட்டச்சத்துக் குறைவால், பிறக்கும் குழந்தைகளுக்கு மூளைவாதம், எடைகுறைந்த குழந்தைப் பேறுபோன்றவை ஏற்படும். இதனை ஆரம்பத்திலேயே தடுப்பதற்காகக் கர்ப்ப காலத்தில் போதிய ஊட்டச்சத்து உணவு வழங்குவதை முதல்நிலைத் தடுப்புமுறை எனக்கூறலாம்.

21. இரண்டாம் நிலைத்தடுப்பு முறைகள் என்றால் என்ன?

இதன் நோக்கம் ஏற்கெனவே இருக்கும் நோயாளிகளுக்குச் சிகிச்சையளித்து, தடுப்பு முறைகள் மூலம் அவர்களின் தொகையை குறைப்பதாகும். இதில் நோயாளரைக் கண்டறிந்து சிகிச்சையளிப்பதும் உள்ளடங்கும். உதாரணமாக விற்றமின்-ஏ என்னும் உயிர்ச்சத்துக் குறைவால் கண்களில் வெண்செதில்கள், மாலைக்கண் போன்றவை ஏற்பட்டுள்ளவர்களுக்கு விற்றமின் 'ஏ' மாத்திரை வழங்கி குணமாக்குவதும், பச்சைக்கீரைகள், மஞ்சக் காய்கறிகள் ஆகியவற்றை உட்கொள்ள ஊக்குவிப்பதும் இரண்டாம் நிலைத் தடுப்பு முறைகளில் அடங்கும்.

22. மூன்றாம் நிலைத் தடுப்பு முறைகள் என்றால் என்ன?

நோயால் ஏற்படக்கூடிய பின்விளைவுகளை அதாவது பாதிப்புகளை தடுத்தல் அல்லது நோயின் பாதிப்பு மோசமடையாது தடுத்தல் மூன்றாம் நிலைத் தடுப்பு முறையாகும். உதாரணமாக மூளைவாதத்தால் பாதிப்புற்ற குழந்தை நடக்கமுடியாது. இந்த நிலையிலேயே குழந்தையை விட்டு வைத்தால் தசைகள் சுருங்கி இறுகிவிடும். இப்படித் தசைகள் இறுக்கமடைந்தால் நிரந்தரமாக நடக்கமுடியாது போய் விடும். கை, கால் தசைகளுக்கான உடற்பயிற்சிகளை ஆரம்பத்தில் இருந்து செய்து வந்தால் இதைத் தடுக்கலாம். இதேபோல் காசநோய்க்குச் சிகிச்சை பெறுபவர்கள் தமது ஊட்டச்சத்து நிலையைக் கவனிக்காதுவிட்டால் பாதிப்புக்கள் கடுமையாக இருக்கும் என்பதையும் குறிப்பிடலாம் இதனைத் தவிர்க்க சிகிச்சை பெறும் காலத்தில் ஊட்டச்சத்து உணவுகளை உட்கொள்ளுவதும் மூன்றாம் நிலைத்தடுப்பு முறையாகும். (தொடரும்)

படிப்பகம்

www.padippakam.com



# கிலிகொள்ளச் செய்த கிளிநொச்சிப் பயணம்

**எஸ். சுரேந்திரன்**

கிளிநொச்சியை மீண்டும் கைப்பற்றும் முயற்சியில் கடந்த பிப்ரவரி முதலாம் திகதி விடுதலைப் புலிகள் மும்முனைத் தாக்குதலை மேற்கொண்டனர். இந்தத் தாக்குதலில் இரு பகுதிகளிலும் பலத்த இழப்புகள் ஏற்பட்டன விடுதலைப் புலிகள் கிளிநொச்சியை மீண்டும் கைப்பற்றிவிட்டனர் என்ற செய்தி பரவலாக அடிப்பட்டன. இச்செய்தியை மறுதலித்த அமைச்சர் அனுருத்த ரத்வத்த கிளிநொச்சியை புலிகள் கைப்பற்றவும் இல்லை. பிரபாகரனைப் பிடிக்கும் நிலையில் நாங்களும் இல்லை என்ற செய்தி பத்திரிகைகளில் வெளிவந்தன. இதையடுத்து பத்திரிகைக் குழு ஒன்றை அரசாங்கம் கடந்த பிப்ரவரி 15ஆம் திகதி கிளிநொச்சிக்கென கொழும்பில் இருந்து அனுப்பி வைத்தது. அதில் சென்ற நான் 15 வருடங்களுக்குப் பின் கிளிநொச்சியைப் பார்க்கும் ஆவலில் இருந்தேன்.

கடந்த 15ஆம் திகதி பலாலி சென்ற நாம் ஹெலிகாப்டர் மூலம் ஆனையிறவு முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டோம். அங்கிருந்து பரந்தன் இராணுவ முகாமுக்கு பஸ் வண்டி மூலம் போகவிருந்த எமக்கு குண்டு துளைக்காத கவச உடையும் தலைக் கவசமும் அணியச் சொன்னார்கள். கைப்பற்றிய கிளிநொச்சியைப் பார்க்கப் போகிறோமா? அல்லது போர்க்களத்திற்குப் போகிறோமா என்ற கேள்வியே பத்திரிகையாளர் மத்தியில் எழுந்தது.

### கவச உடை தலைக்கவசம்

பரந்தன் முகாமில் பஸ்ஸை விட்டு இறங்கிய எமக்கு விடுதலைப் புலிகளிடம் இருந்து கைப்பற்றபட்டதாகக் கூறப்பட்ட ஆயுதங்களைக் காண்பித்தனர். எமது வருகைக்காக இவை ஒழுங்காக நிலத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன போலும்.

ஆனையிறவு முகாமில் வைத்து வீடியோ நாடா மூலம் இதைக் காண்பித்த போது தாக்குதலில் இறந்த விடுதலை புலிகளின் உடல்கள் எனக் கூறி உடல்கள் சிலவற்றைக் காண்பித்தனர்.

பரந்தன் முகாமில் இருந்து பஸ்ஸில் செல்வது பாதுகாப்பில்லை. எனவே எல்லோரும் முன்னால் உள்ள ஜீப் வண்டியிலும் பிக்கப் வாகனத்திலும் ஏறுங்கள் என்று கூறி எங்களை அவற்றில் ஏற்றி அழைத்துச் சென்றனர். கவச உடையும் தலைக் கவசமும் அணிந்து கொண்டு சென்றது புதிய அனுபவமாக எமக்கிருந்தது. ஓட்டுனரின் ஆசனத்திற்கு அருகில் இருந்ததால் நகரின் இருபுறமும் உள்ள உடைந்த நிலையில் உள்ள வீடுகளையும் கடைகளையும் காணக் கூடியதாக இருந்தது.

புதிய பிக்கப் வாகனமாக இருந்ததால் ஏ.சி.யைப் போடும்படி இராணுவ சாரதியிடம் சொன்னேன். ஏ. சி. வேலை செய்வதில்லை. ஓடுவதற்கு வேறு வாகனம் இல்லாதபடியால் கொண்டு வந்து ஐந்துநாட்கள் தான் ஆகிறது என்றார்.

### பாதுகாப்புக்காக படுக்கவைத்தனர்

கரடிப் போக்கு சந்தியை தாண்டி ஒரு கிலோ மீட்டர் போனதும் கிளிநொச்சியின் மேற்கே எல்லா வாகனங்களும் திருப்பப்பட்டன. பின் 1½ கிலோ மீட்டர் தூரம் வரை திரும்பித் திரும்பி வளைந்து சென்றன. இடங்களை அடையாளம் காணாதபடி பற்றைக்காடுகள் வளர்ந்திருந்தன. இடைக்கிடையே இடிந்து போன வீடுகள் மழையினால் மண்ணரிப்பு ஏற்பட்ட பாதைகள் போக முடியாது என நினைத்த வீதியில் எல்லாம் வாகனம் மெல்ல மெல்ல ஊர்ந்து ஏறியது.

வாகனம் ஓரிடத்தில் நிறுத்தப்பட்டது. மீண்டும் ஒரு பயமுறுத்தல் அதாவது சகலரும் தங்கள் பைகளை வைத்துவிட்டு கமராக்களுடன் மாத்திரம் வரவும் என்ற அழைப்பு. நான் ஏன் என்று கேட்டேன். ஏதும் நடந்தால் நிலத்தில் விழுந்து படுக்க வேண்டுமாம். ''இது என்னடா நாசமாய் போனது? கிளிநொச்சியைக் காட்டக் கூட்டி வந்து கடைசியில் படுக்க வேண்டி வரும் என்கிறார்களே.

இதற்குள் ஒற்றையடிப் பாதையால் எங்கோ நடந்து போய் ஓரிடத்தில் நின்றார்கள் நானும் ஓடோடிப்போய் அவர்களுடன் நின்று கொண்டேன். அதோ அதுதான் புகையிரத நிலையம் 50 மீட்டர் தூரம் இருக்கும். அதுவும் பின்பக்கம் ஏணிப்படி வேறு தெரிந்தது. புரிந்து கொண்டேன். புகையிரத நிலையத்தில் சமிக்ஞை மாற்றிக்கெனக் கட்டப்பட்டிருக்கும். கட்டிடம் அடுத்து இடிபாடுகளுடனான வீட்டின் மத்தியில் திரும்பி வேறு பக்கமாகச் சென்றோம். ஒரு வீடியோ 'கமராமேன்' இடிந்து போன வீட்டின் மத்தியில் நின்று வெளியில் படமெடுக்கப் போக ஓடோடிச் சென்ற இராணுவவீரர் இப்படி நிற்க வேண்டாம். கட்டிடத்தோடு மறைந்து நில்லுங்கள். இப்படி நின்றால் விடுதலைப் புலிகள் உங்களைத் தெரிந்து தாக்குவார்கள் என்றார். இதைக் கேட்ட எனக்கு மூன்றாவது பயமுறுத்தலாக இருந்தது.

### அரசு-புலிகள் கயிறிழுக்கும் போட்டி

தொடர்ந்து சென்றோம், அங்கு புதிய 'பங்கர்' அமைப்பதில் இராணுவ வீரர்கள் ஈடுபட்டதைக் காண முடிந்தது. முன்னால் இருந்த பெரிய கட்டிடத்தைக் காட்டி இது என்ன? என்றேன். கிரிஹல என்றார்கள் (பால்சாலை) அத்தோடு வந்த வழியே திரும்பி எண்ணெய்குதம் பக்கமாக சென்று ஐ.சி.ஆர்.சி. பின்பக்கமாக தபால் நிலையத்தின் முன்பக்கம் சென்று அந்தத் தபால் நிலையம் எப்போது யாரால் திறக்கப்பட்டது என்று அடிக்கல்லில் எழுதப்பட்டதைப் பார்த்து விட்டு வைத்தியசாலையின் வளவிற்குள் குதித்து அதனூடாக சென்று மத்திய பாதைக்கு வந்தோம். வாகனத்தை அங்கு கொண்டுவந்து நிறுத்தியிருந்தனர். பாதையின் மத்தியில் நின்று படம் பிடிக்கச் சென்றேன். போக விடவில்லை. கரையில் நின்று எடுக்கச் சொன்னார்கள். பின்னர் பரந்தன் குறிகாட்டி முன்னால் இருந்தது வாகனத்தை நிறுத்தி எங்களோடு வந்த சில இராணுவ வீரர்களை அதில் நிறுத்தி படம் எடுத்தனர். எதிர்திசையில் பார்த்தால கிளிநொச்சி. எல்லோரும் அந்தப்பக்கமாகவேநின்று புகைப் படம், வீடியோ எடுத்தனர். அவ்விடத்திலும் தாமதிக்கவில்லை. உடனே பரந்தன் சென்று அங்கிருந்து அதே பஸ் வண்டியில் ஆனையிறவு சென்றோம். உடம்பில் இருந்த பெரிய சுமையை அப்போது தான் கழற்றி வைத்தோம் இதுதான் பத்திரிகையாளர்கள் பார்த்த கிளிநொச்சி.

உண்மையில் இது ஒரு கயிறு இழுத்தல் போட்டிதான் கயிற்றின் மையப் பகுதி தற்போது விடுதலைப் புலிகளில் பக்கமாக உள்ளது. இதை இழுத்தெடுக்கும் முயற்சி தான் இப்போது நடைபெறுகிறது. வெற்றிப் புள்ளிவரை இழுத்தெடுக்க சொற்ப தூரம்தான். இதற்கிடையில் கயிற்றில் இன்னுமொரு மையப் புள்ளியை இராணுவம் வைத்துள்ளது. இந்த இரண்டு மையப் புள்ளிகளிலும் எது சரியானது என்பதுதான் எமக்கு புரியாத புதிராக உள்ளது.

# குள்ளூர்ச்சந்தைச் செய்தி பற்றி ஒரு விளக்கம்

அன்புடையீர்

''ஈழசுதந்திரன்'' ஜனவரி இதழில் குள்ளூர்சந்தை முகாமில் நடந்த விளையாட்டு விழாச் செய்தியில் விடுபட்டுள்ள கீழ்க்காணும் தகவல்களை தங்கள் கவனத்திற்கு வைக்கின்றேன்.

1. விளையாட்டுக்குழு, மாதர் சங்கம், மாணவர் மன்றம், ஆசிரியர்கள், நலப்பணியாளர்கள், ஆலய நிர்வாக சபை, பொதுமக்கள் என அனைத்து தரப்பினரும் இணைந்து செயல்பட்டமை :

2. முகாம் தலைவர் மிகச் சிறந்த பொன்னாடை ஒன்றை ''ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத் தலைவருக்குப் போர்த்திக் கௌரவித்தமை.

3. ஈழமக்கள் வாழ்வில் மறக்கவொண்ணாத மாந்தருள் மாணிக்கங்களான தந்தை செல்வா, ''MMSSS'' தொண்டு நிறுவன முன்னாள் செயலர் அருட்திரு அலெக்ஸ் டயமன் ராஜ் அடிகள் ஆகியோருக்கு அஞ்சலிகள் செலுத்தப்பட்டதுடன் நினைவாஞ்சலிபபாடல்களும் பாடப்பட்டன.

4. 275க்கு மேற்பட்ட பரிசுகள் வழங்கப்பட்டன.

5. ''MMSSS'' முன்னாள் செயலர் நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.

6. சாதனைத் தகவல்கள் :

அ. 1997ல் ''ஈழ சுதந்திரன்'' நடத்திய பரிட்சைகளில் முதல் பரிசு இம் முகாமிற்கு!

ஆ. மிக அதிக உயரப்பாய்தல் 5-10 அங்குலம்!

இ சிறந்த தொண்டர் ஆசிரியர்கள்!

ஈ. சிறந்த ஓவியர்!

உ. சிறந்த குரல் வளம் உள்ளவர்கள்!

ஊ. அனைத்து தரப்பினரும் இணைந்து செயல்படல்!

எ. சிறந்த மேடை அமைப்பு ஆகியன!

மேற்படி தகவல்கள் அனைத்தும் நமது செய்திகளில் வெளியிடுவதால் ஏனைய முகாம்களின் திறமைகளையும் வெளிப்படுத்த ஏதுவாக அமையுமென அன்புடன் தெரிவிக்கின்றேன்.

[ஏற்கெனவே வெளியிடப்பட்ட செய்தியே அதிகம். இது வேறு மேலதிகம். மற்ற முகாம்களிலிருந்து செய்தி அனுப்புவோர் இதைப் பின்பற்ற வேண்டாம்.

ஆசிரியர்]

கா. சி. காளிமுத்து
இலங்கை அகதி முகாம்,
கல்வி இணைப்பாளர்
குள்ளூர்ச்சந்தை.

# வெம்பக்கோட்டை முகாமில் மாணவர் பேருந்து கட்டண உதவி வழங்கு விழா

விருதுநகர் மாவட்டம் வெம்பக் கோட்டை ஈழத் தமிழர் அகதி முகாமில் கடந்த 15-11 1997 அன்று ஈ. ஏ. ம. கழக மாவட்ட சமூக சேவையாளர்கள் எஸ். வேலாயுதம் ஆர். பொற்சேரன் ஆகியோரால் முதலாம் வகுப்பு முதல் பதினொன்றாம் வகுப்பு வரை கல்வி பயிலும் ஏதிலியர் மாணவ மாணவியருக்கு மொத்தம் 250 குழந்தைகளுக்கு 19 ஆயிரத்து 993 ரூபாய் இரண்டு மாத பேருந்து கட்டணமாக ஈழ ஏதிலியர் மறுவாழ்வு கழகம் சார்பில் வழங்கப்பட்டது.

இவ்விழாவில் M.M.S.S.S. மாவட்ட முகாம் கல்வி இணைப்பாளர் K. S. காளிமுத்து முகாம் பொது நிர்வாக குழுத் தலைவர் எம். சித்திரவேல், உபதலைவர் பாஸ்கரன் (எ) ஜேசுதாஸன் விளையாட்டு குழு தலைவர் எஸ். மரியதாஸ், இளைஞர் அணித் தலைவர் ஜே. டிலக்ஷன், மாதர் சங்கத் தலைவி திருமதி மேரி கணேசன், கோழிப் பண்ணைப் பொறுப்பாளர் திருமதி ஓமினா சிவக்குமார், மாலை வகுப்பாசிரியைகள் எம். செபஸ்டியம்மாள், ஒய். திரேசம்மா நலப்பணியாளர் செல்வி ஜே. சுமித்திரா, மாணவர் மன்றத் தலைவர் எஸ். சுரேஷ், செயலாளர் கே. ரஞ்சித்குமார் நிர்வாகக் குழு ஆலோசகர் டி. இராஜாமணி, எம். எம். எஸ்: எஸ். எஸ். தொண்டராசிரியைகள் எம், சந்திரபிள்ளை, எ. மெரினா மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

# மொட்டைமலை முகாமில் மாணவர் பேருந்து கட்டண வழங்குவிழா

வெம்பக் கோட்டையைத் தொடர்ந்து மறுநாள் (16-11-97) மொட்டைமலை இலங்கை அகதி முகாமில் 126 மாணவ மாணவியருக்கு மொத்தம் ரு. 6708 பேருந்துக் கட்டண உதவியும், 3 நபர்களுக்கு கண் கண்ணாடி வழங்கும் விழாவும் நடைபெற்றது. முகாம் நிர்வாகிகள் பெற்றோர்களுடன் வெம்பக் கோட்டை நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களும் கலந்துகொண்டனர்.

# கவிதைச் சரம்

## புற்றுநோய்க்கு புதிய அணுகுமுறை

இயற்கையான நோய் எதிர்ப்பைத் தூண்டி புற்றுநோய் குணத்தை குறைத்து வெல்லும் முறை ஒன்றை டாக்டர் ஜெபஸ்டின் அவர்கள் பாஸ்டன் நகரில் கண்டுபிடித்துள்ளார். 7000 புற்றுநோய் மருத்துவர்கள் கலந்து கொண்ட மாநாட்டில் ஆச்சரியம் படும்படி இந்தச் செய்தி நடந்துள்ளது. அவர்களில் பலர் எலிகளில் சோதித்ததில் வெற்றிக் கிடைத்துள்ளது.

---

(5-ம் பக்கம் தொடர்ச்சி)

## இலங்கையில்...

நிறுத்தப் பணிக்குமாறு கோருகிறோம்.

மோதலுக்கு தீர்வு காணும் பொருட்டு மத்தியஸ்த சேவையை வழங்குமாறு கோருகின்றோம்.

இலங்கையில் உள்ள அனைத்து மக்களுக்கும் பாதுகாப்பு, சமாதானம், வாழுமிடம், மனிதமதிப்பு ஆகியவற்றை வழங்கும் தீர்வைக் காண்பதற்கு அனைத்து தரப்பினரையும் வற்புறுத்துவதற்கு சர்வதேச சமூகத்திடமிருந்து குறிப்பாக, ஐ.நா.விடமிருந்து ஆதரவைக் கோருமாறு அவுஸ்திரேலிய அரசைக் கோருகிறோம்.

### ஆயுதப் போர் நிற்கரும்

சர்வதேச மத்தியஸ்தத்தின் ஊடாக சமாதானத்தை அடைவதற்கு ஆதரவாக, பாராளுமன்றத்தின்பலகட்சித் தீர்மானத்தைக் கொண்டு வரவும் கோருகிறோம்.

இலங்கையில் பேரழிவையும் பெரும் உயிர்ச்சேதத்தையும் ஏற்படுத்தியுள்ள ஆயுதப் போரை உடன் நிறுத்துமாறு இலங்கை அரசாங்கத்தையும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தையும் கேட்டுக் கொள்கிறோம்.

அனைத்து இனத்துவக் குழுக்களினதும் அடையாளத்தையும் கௌரவத்தையும் உறுதிப்படுத்தக்கூடிய நீதியானதும், சமாதானமும் கொண்ட தீர்வைக் காணுமாறும் கோருகிறோம்.

மோதலின் நீதியானதும் நிலையானதுமான தீர்வுக்கு எமது ஆதரவை இலங்கை மக்களுக்கு குறிப்பாக இலங்கைத் திருச்சபைக்கு

## நினைத்ததைப் முடிப்போம்!

அடுக்களையில் அவிந்த நாங்கள்
ஆயுதம் ஏந்தி விட்டோம்!—நல்ல
அறிவியல் மாந்தி விட்டோம்...!!
அன்ன நடை நடத்த நாங்கள்
அகிலம் ஆள வந்தோம்—நல்ல
அறிவை வளர்க்க முனைந்தோம்!!!

கொழுத்து விட்ட தீயவற்றை
குலை நடுங்க வைத்தோம்—நாங்கள்
பழுத்த மூடத்தனத்தை—இந்தப்
பாரினில் ஓட்டி விட்டோம்!!
முக்காடிட்டு முனகிய நாங்கள்
மூடத்தனத்தை தூக்கி எறிந்தோம்...!!
அடிமை மூச்சை நிறுத்தி—நல்ல
அரசை ஆள வந்தோம்...!!!

கொலு பொம்மையாய் இருந்த நாங்கள்
கொற்றம் அடக்க வந்தோம்...!!
கோட்டை ஆள வந்தோம்—எங்கள்
நாட்டைக் காக்கத் துணிந்தோம்...!!
சாத்திரம் கற்றுக் கொண்டோம்—புதுச்
சூத்திரம் படைத்து நின்றோம்!!

ஆத்திரம் கொள்ளாமல்—நாங்கள்
அறிவை வளர்த்துக் கொண்டோம்!!
தீத்திறம் மாய்க்கத் துணிந்தோம்—ஈழ
தேசம் படைக்க முனைந்தோம்
பாரதி கண்ட பெண்களாய்—இந்தப்
பாரை ஆள் வந்தோம்
நேரெதிர் நிற்கப் போமோ?—நாங்கள்
நினைத்ததை முடிப்போம் உறுதி!

இவண்,
தி. சித்திரவடிவு
இ. அ. முகாம், குடியாத்தம்

## விட்டுப் பிரிந்தேன்

ஆர். திருச்செல்வம்
இலங்கை மக்கள் குடியிருப்பு
குல்லூர் சந்தை, விருதுநகர் மாவட்டம்

தந்தையை விட்டுப் பிரிந்தேன்
தாய் நாட்டையும்
விட்டுப் பிரிந்தேன்

மாதாவைப் விட்டுப் பிரிந்தேன்
மாண்பு நிறைந்த
ஈழ நாட்டை விட்டு பிரிந்தேன்

உயிர் நண்பனை விட்டுப்
பிரிந்தேன் நல்லதொரு
நாட்டை விட்டுப் பிரிந்தேன்.

நீதியை விட்டுப் பிரிந்தேன்—என்
நிம்மதியையும் விட்டுப் பிரிந்தேன்.
கனவையும் விட்டுப் பிரிந்தேன்
ஆனால் என் ஈழ நாட்டு
நினைவை மட்டும் விட்டுப் பிரியேன்.

## இலையுதிர்ந்த மரம்

இ. இந்திரன
இ. அ. முகாம், கூனிமேடு

ஓ...மைந்தனே!
ஏன் இந்த மரம் தனது
இலைகளைக் கொட்டி நிற்கின்றது?

இம்மரத்தின் ஆணிவேருக்கு நீரில்லாமலா?
இல்லை!
ஊரை அழிக்கும் புயற்காற்றுக்குத்
தாக்குப் பிடிக்க முடியாமலா?
அல்லி!
பிறகு ஏன்?

சொல்லவா முடியும்?
தமிழீழ மண்ணின் மைந்தர்கள்
சிங்கள இனவாதப் படைகளால்
மரணக்குழிகளில் மண்மூடப்படும் போது
தனது மனச்சுமையைக்
கண்ணீர்விட்டுக் காட்ட முடியாததால்
இலைகளை உதிர்த்து இரங்கல் தெரிவிக்கிறது!
உதிர்க்கும் இலைகளால் புதைகுழிக்கு நிழல்
சேர்த்து விட்டு

இலை உதிர்ந்த மரமாய்
களையிழந்து நிற்கிறது!

## நில்! கவனி! நட!

வி. ஜெயசக்திவேல்
இ. அ. முகாம் பரமத்தி

நில்!.........
நெட்டி முறித்துக் கொண்டு
வீசிடும் காற்றுக்கு!
கட்டிப்பிடித்து முத்தமிட்டிடும்
கவிதைக்கு!
அடுத்தடுத்துச் சுடப்பட்டு விழும் பிணங்களை
ஈழ மண்ணில் எரிப்பதற்கு!
அல்லது சிதைந்து கிடக்கும் பிணங்களைப்
பொறுக்கி எடுத்துப் புதைப்பதற்கு!
கவனி!.........
பிஞ்சுக் குழந்தைகளையும் பிடித்து
யுத்த களத்திற்கு அனுப்புவதால்
எஞ்சியிருக்குமா தமிழினம்
இனி ஈழ மண்ணில் என்று!
வசதிதேடித் திறமையுள்ளோர் எல்லாம்
வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டதால்
நிசமான திறமையுள்ளவர்கள் இனி
ஈழ மண்ணில் இருப்பார்களா என்று!
நட!.........
கல்வியே ஈழத்தின்
செல்வம் என்றுணர்ந்து
எவ்விதத்திலும் எவ்விடத்திலும்
அதைப் பெற முனைந்து!
வாழ வழிநாடி அறுநீர்ப்
பறவைகள் பறந்தாலும்
ஈழம் அடையும் வரை
நான் ஓயமாட்டேன் என்று!

---

# உயிலங்குளத்தில் கெடுபிடி: மக்கள் வவுனியா வரமுடியாத நிலை

இராணுவ கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பகுதியில் இருந்து இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குள் வருபவர்கள் மீது உயிலங்குளம் பகுதியில் பிரயோகிக்கப்படுகின்ற கெடுபிடிகள் காரணமாக பலர் வவுனியா நகரப் பகுதிக்கு வரமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் 50-ஆவது சுதந்திர பொன் விழாவை அடுத்து பாதுகாப்பு காரணங்களுக்காக இராணுவக்கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குள் வருபவர்களின் எண்ணிக்கை கடுமையாக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. கடந்த 5-ம் திகதிக்குப் பின்னர் இந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன. இதன் காரணமாக தமது பல்வேறு தேவைகளையும் பூர்த்தி செய்வதற்காகக் காத்திருந்த பெரும் எண்ணிக்கையானவர்கள் வவுனியா நகரப் பகுதிக்கு வருவதற்காக உயிலங்குளம் ஊடாக வருகின்றனர்.

### இராணுவக் கெடுபிடி

இவ்வாறு வருபவர்களுக்கு உயிலங்குளத்தில் இருந்து வவுனியா வருவதற்குப் [illegible]மில்லாத நிலைமையிலும் இராணுவத்தினரால் ஏற்றி அனுப்பி வைக்கப்படுவதாக அங்கிருந்து வருகின்ற பலரும் தெரிவிக்கின்றார்கள்.

மன்னாரில் இருந்து இரண்டு அல்லது மூன்று பஸ் வண்டிகளே சேவையில் ஈடுபடுகின்றன. இந்த பஸ் வண்டிகள் முழுமையாக நிறைந்த நிலையிலேயே உயிலங்குளத்திற்கு வருவதுண்டு. எனினும் இவற்றிலேயே பிரயாணம் செய்யவேண்டும். அவ்வாறு முடியாதவர்கள் மன்னாருக்கே போகவேண்டும் என இராணுவத்தினர் பிடிவாதமாக அனுப்பி வைக்கின்றார்களாம். கடந்த சில தினங்களில் இவ்வாறு வவுனியா செல்வதற்கு உயிலங்குளத்திற்கு வந்து பஸ் ஏற முடியாமல்போன ஆயிரக்கானவர்கள் இராணுவத்தின் கூற்றுப்படி மன்னாருக்குச் செல்ல மறுத்து இராணுவக் கட்டுப்பாடாற்ற பகுதிகளுக்கே திரும்பிச் சென்றுள்ளார்கள்.

இவ்வாறு கடந்த சில தினங்களாக சுமார் மூவாயிரம் பேரளவில் உயிலங்குளத்திற்கு வந்த பின்பு திரும்பிச் சென்று பள்ளமடுவில் உள்ள விடுதிகளில் தங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



# அறிவியல் பகுதி

# தகவல் தொடர்பு பயிற்சியின் மேலதிக விளக்கப் பயிற்சி

## தகவல் தொடர்பு கோட்பாடுகள்

நாம் ஏற்கனவே தகவல் தொடர்பு தொடர்பான பல்வேறு முக்கிய அம்சங்களையும் கண்டுள்ளோம். இது தொடர்பாக பல்வேறு அறிஞர்கள் உருவர்க்கிய] பல்வேறு மாணவிகள் பற்றிய கருத்துகளையும் பகிர்ந்து கொண்டுள்ளோம். இந்த வகையில் இங்க தகவல் தொடர்புக் கோட்பாடுகள் பற்றிக் கண்டு கொள்வோம்.

தகவல் தொடர்பு மாதிரிகள், தொடர்பியல் கோட்பாட்டாளர்களுக்குத் தம்முடைய ஆய்வு முடிவுகளை நடைமுறையில் சோதித்துப் பார்க்கக் கூடிய ஓர் அமைப்பினை அளிக்கின்றன. மக்கள் தொடர்புக் கோட்பாடுகளை இரு வழிகளில் நோக்கலாம். ஒன்று அவற்றின் வரலாற்றியல் வளர்ச்சி பற்றிய காலக் கணிப்பு (Chronological) சார்ந்த பார்வை. மற்றொன்று பரந்த, மறுப்பிற்கிடமற்ற மெய்மைத் தோற்றம் (Categorical Perpectives) பற்றிய பார்வை. இவ் இரு அணுகுமுறைகளுமே மதிப்புடையனவும் பயனுடையனவுமாய் இருந்த போதிலும், தகவல் தொடர்பு முறையின் கூறுகள் வழியாக அதாவது நாம் ஏற்கெனவே தகவல் தொடர்பு மாதிரிகளில் பார்த்துள்ள தருநர், தகவல், தகவல் தொடர்பு வழி, பெறுநர், விளைவு எனும் கூறுகள் வழியாக நோக்குவதே வெற்றிகரமான வழியாகுமென நம்புகிறோம். இப்படிப்பட்ட பார்வையே கோட்பாட்டுருவாக்கத்தில் மாதிரிகளுக்கும் கோட்பாட்டிற்கும் இடையிலான உறவினை நன்கு புலப்படுத்தும்.

மாதிரிகளை மனதிற் கொண்டு உருவாக்கப்பட்ட கோட்பாடுகளுள் அரசுரிமைக் கோட்பாடு (Authoritarian Theory). மக்களுரிமைக் கோட்பாடு (Libertarian Theory) சமுதாயப் பொறுப்புணர்ச்சிக் கோட்பாடு (Social Responsibility Theory), சோவியத்-பொதுவுடைமைக் கோட்பாடு (Soviet-Communist Theory) என்பவை பத்திரிகைத்துறையின் நால் வகைக் கோட்பாடுகளெனக் கருத்தில் கொள்ளப் படுகின்றன. இவை, தருநர் சார்ந்த கோட்பாடுகளாகும்.

### அரசுரிமைக் கோட்பாடு

பத்திரிகைகளின் அரசுரிமைக் கோட்பாட்டினை அச்சிடுதலின் தொடக்கத்திலேயே காணலாம். இதனை அதிகார வர்க்கக் கோட்பாடு என்றும் கூட வழங்கலாம். அன்று, அதிகாரத்தில் இருப்போரிடத்தில்தான் உண்மை இருக்கின்றது என்றெண்ணப் பட்டது. ஆட்சியாளர்களால் அச்சிடுவோர்க்கு உரிமை வழங்கப்படுவதன் மூலம் பத்திரிகைக்குக் கடுமையான கட்டுப்பாடு இருந்தது. பத்திரிகையைத் தொடங்குவதற்கான உரிமம் (License) வழங்கும்போதே அரசு, அச்சகத்தாரிடம் ''என்னை ஆதரித்து எழுதுகிறாயா? உனக்கு அனுமதி தருகின்றேன்'', என்று வெளிப்படையாகவோ குறிப்பாகவோ தெரிவித்துவிடும்.

அரசுக்கு எதிரான ஒரு தகவல் அல்லது உண்மை மக்களுக்குத் தெரியக்கூடாது என்று அதிகார வர்க்கம் எண்ணும்போது, அந் தகவலை அல்லது உண்மையை வெளியிடவிருக்கும் பத்திரிகையின் மீது தணிக்கை முறை (Censorship) பாயும், இது இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்த நிலை மட்டுமல்ல; இன்றைய நிலையும் இதுதான். பத்திரிகை தனியாருடையதாக இருந்தாலும், அரசை ஆதரித்து அல்லது அதற்கு வக்காலத்து வாங்கி எழுத வேண்டிய நிலைக்கு இந்தக் கோட்பாடு பெயராயிற்று.

இக்காலத்தில் பத்திரிகைச் சுதந்திரம் என்று பெயரளவில் சொல்லப்பட்டாலும், நிலைமை முற்றிலுமாக மாறிவிடாமல் பல நாடுகளில் அரசுரிமைக் கோட்பாடு கொண்டதாகவே விளங்குகிறது. நாடுகளுக்கிடையே கீழ்க்காணும் வகையில் சில வேறுபாடுகள் மட்டும் நிலவுவதுண்டு.

### 1. முழு அச்சகக் கோட்பாடு

சோவியத் யூனியன், சீனா, யூகோஸ்லேவியா ஆகிய நாடுகளில் அச்சகங்களின் கட்டுப்பாடு முழுமையாக ஆட்சியாளரிடமே உண்டு. அவர்களை மீறி எதுவும் அச்சிட்டு வெளியிட முடியாது.

### 2. பெயரளவுச் சுதந்திரம்

கொலம்பியா, எகிப்து, சிரியா ஆகிய நாடுகளில் பத்திரிகைச் சுதந்திரம் கொள்கை அளவிலேயே வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், செயல்முறை என்று வரும் போது கண்காணிப்பு பலமாகவே இருக்கும்.

### 3. பத்திரிகைச் சிறப்புச் சட்டங்கள்

தென் ஆப்பிரிக்கா, ஈரான், ஈராக், இந்தியா, பாகிஸ்தான், லெபனான் ஆகிய நாடுகளில் பத்திரிகை ஆசிரியர்களைக் கைது செய்யச் சிறப்புச் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. அதிகார வர்க்கத்தினரைக் கண்டித்து யாரேனும் எழுதி விட்டால் அந்தப் பத்திரிகை ஆசிரியருக்குச் சிறைத் தண்டனையோ, அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்க இந்தச் சட்டங்கள் வழி வகுக்கின்றன.

### 4. தந்திர அடக்குமுறை

துருக்கி, அர்ஜென்டினா மற்றும் இந்தோனேஷியாவில் 'இரும்புக்கரம் கொண்டு பத்திரிகைகளை அடக்காமல் தந்திரமாகத் தட்டிக் கொடுத்தும், இனிமையாகப் பேசியும் பத்திரிகைகளைத் தம் வழியில் ஆட்சியாளர்கள் கொண்டு செல்கின்றார்கள். ஆனால் இதுவும் கூட அரசுரிமைக் கோட்பாடு என்றே வழங்கப் படும்.

### மக்களுரிமைக்கோட்பாடு

17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஜான் மில்டனை 'மக்களுரிமைக் கோட்பாட்டின் தந்தை' என்று கூறலாம். கவறானதை விடுத்து நியாய மானதைப் பேசுதல், தயங்கத தவிர்த்து நன்மையைச் செய்தல், பொய்ம்மையை நீக்கி உண்மையைக்காட்டுதல் ஆகியவை கருத்துச் சுதந்திரத்திற்கு அடையாளமாகும். மில்டன் வகுத்த இக் கோட்பாட்டினை அடியொற்றி, இதனை மேலும் வளர்த்தவர்கள் ஜான் ஸ்டுவர்ட் மில் (John Stuart Mill), தாமஸ் பெய்ன் (Thomas Paine), ஜான் எர்ஸ்கின் (John Erskine) ஆகியோர் ஆவர். இவர்கள் அனைவரும் அரசியலில் குடியாட்சி முறையினைத் தீவிரமாக ஆதரித்தவர்கள்.

கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், பகுத்தறிவு, இயல்பான உரிமைகள் ஆகியவற்றில் இவர்கள் அதிக நம்பிக்கை கொண்டிருந்தனர். மக்களுக்குச் செய்திகளைச் சொல்லுதல், பத்திரிகைகளை விற்றல், பொழுது போக்கு அம்சங்களை வழங்குதல், உரிமையை நிலை நாட்டுதல், அரசு தவறு செய்யாதவாறு கண்காணித்தல் ஆகியவை பத்திரிகையின் இன்றியமையாப் பணிகள் என்று அவர்கள் கருதினார்கள்.

மக்களுரிமைத் தத்துவத்தைப் பின்பற்றும் நாடுகளில் அச்சகங்கள் தனியார் உடைமையாகவும்; அவதூறு (defamation), ஆபாசம் (obscenity) முறையின்மை (impropritey), போர்க்கால அமைதியின்மை (War-time Sedition) ஆகியவற்றிற்கு அப்பாற் பட்டவையாகவும் இருத்தல்வேண்டும். அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும், பிரிட்டனிலும், மேற்கு ஐரோப்பிய நாடுகள் சிலவற்றிலும் இத்தகைய மக்களுரிமைக் கோட்பாடு நடைமுறையில் இருக்கின்றது.

### சமுதாயப் பொறுப்புணர்ச்சிக் கோட்பாடு

ஒருவகையில் மக்களுரிமைக் கோட்பாட்டின் விரிவாக்கமே, சமுதாயப் பொறுப்புணர்ச்சிக் கோட்பாடு எனலாம். அதாவது, ஒரு தனி மனிதரைப் பற்றிய அவதூறு, ஆபாசம் மற்றும் முறையின்மைச் செய்திகளைக் கூறும் வழியில் செல்லாமல், அதே நேரத்தில் "அந்தத் தனி மனிதரால் தீங்கு நிகழுமானால் அதைச் சுட்டிக் காட்டுகின்ற பொறுப்புணர்ச்சியோடு பத்திரிகை விளங்க வேண்டும். பத்திரிகைக்குரிய ஆறு பொறுப்புகளை இக் கோட்பாடு குறிப்பிடுகின்றது. அவை யாவன:

1. சமுதாய நடப்புகள் பற்றிய தகவல்கள், ஆய்வுரைகள், பொதுமக்கள் விவகாரங்கள் மீதான விவரதம் ஆகியவற்றை வழங்குதல்.

2. சுயாட்சி பற்றி மக்களுக்கு அறிவித்தலும் அறிவூட்டலும்.

3. அரசுக்கு எதிரான தனிநபர் உரிமையைப் பாதுகாத்தல்.

4. பொருட்களை விற்போர், வாங்குவோர், விளம்பரப்படுத்துவோர் ஆகியோரை ஒருங்கிணைப்பதன் மூலம் நாட்டின் பொருளாதார சமநிலையைப் பராமரித்தல்.

5. பொழுது போக்கு அம்சங்களை கொண்டிருத்தல் (கலை, கைத்தொழில், ஓய்வு நேர நிகழ்ச்சிகள் ஆகியவற்றை வழங்குவதன்மூலமாக மக்களுக்கு இனிமையான பொழுது போக்குச் சாதனங்களுக்கு வழி வகுத்தல்).

6. தனது பொருளாதாரத் தன்னிறைவினைக்

(8-ம் பக்கம் பார்க்க)

## தாய்ப்பால் அமுதம்

உஷ்ணமான உடம்புள்ள குழந்தைகள் தாய்ப்பால் சாப்பிடும்போது தேகம் குளிர்ச்சியடையும். குளிர்ச்சியான உடம்புள்ள குழந்தைகள் தாய்ப்பால் குடித்தால் தேகம் உஷ்ணமடையும். பிறவியிலேயே அமையும் இத்தகைய தேகத்தின் சீதோஷ்ண நிலைகளை மாற்றும் சக்தி தாய்ப்பாலுக்கு மட்டுமே இருப்பதால் தேவாமிர்தம் எனப்படுகிறது.

குழந்தை பிறந்த பிறகு ஓராண்டுக்கு மட்டுமல்ல பல ஆண்டுகளுக்கும் தேவையான சீரான வளர்ச்சியையும் நோய் எதிர்ப்புச் சக்தியையும் குழந்தைக்குத்தாய்ப்பால் கொடுக்கிறது. தாய்ப்பால் குடிப்பதால் குழந்தைக்கு எல்லா தோஷங்களும் விலகும். உஷ்ண சீதோஷ்ண சீதம் தணியும். வாத பித்தம், மூளைக்காய்ச்சல், நாவறட்சி, சந்திக் காய்ச்சல் ஆகியவை வராது. குழந்தையின் வளர்சிதை மாற்றத்துக்கு அரிய உணவாகிறது தாய்ப்பால்.

விஷக்காற்றால் விளையும் கொலரா, வாந்திபேதி மூளைக்காய்ச்சல் போன்றவை தாய்ப்பால் குடிக்கும் குழந்தைக்கு வருவதில்லை.

தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகளின் மரணவிகிதம் குறைவே. தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகள் மன உற்சாகம் அடைவதால் தேக பூரிப்புடன் வளர்கின்றன. குழந்தைகள் தாய்ப்பாலை உறிஞ்சிக் குடிக்கும் பொழுது தாய்க்கு அதன் மேலுள்ள அன்பும் அதை பாதுகாக்க வேண்டுமென்ற உணர்வும் மனச்சாந்தியும் உண்டாகிறது. குழந்தைகளின் ஆரம்பகால பிரச்சினைகளான கண்நோய்க்கு தாய்ப்பால் ஒன்றிரண்டு சொட்டு கண்களில் பீச்சுவது குணமாக்கும்.

காய்ச்சல் வந்தால் மெல்லிய துணியில் தாய்ப்பாலைத் தடவி நெற்றிமீது பற்றுப் போட காய்ச்சல் குணமாகும். குழந்தைக்கு ஒன்றரை ஆண்டுவரை தாய்ப்பால் கொடுத்து வந்தால் தீவிரமான நோய்களான புற்றுநோய், நீரழிவு, ரத்த அழுத்தம் ஆகியவைகள் வருகிற வாய்ப்பு குறையும்.

தாய்ப்பால் கொடுத்து வருகிற தாய் உடனே கருத்தரிக்க மாட்டாள். தாய்ப்பால் சிறந்த நஞ்சு முறிப்பு நாசினி என்பதால் சித்த மருத்துவர்கள் லிங்கம், வீரம் போன்ற பாஷாணங்களை தாய்ப்பாலில் ஊறவைத்து பக்குவப்படுத்துகிறார்கள்.

தாய்ப்பாலை உச்சந்தலையில் தேய்த்தால் தலைவலி தீரும். தாய்ப்பாலுடன் கொஞ்சம் இஞ்சிச் சாற்றைச் சேர்த்து மிளகு 5 சேர்த்து அரைத்து 50 மில்லி நல்லெண்ணெய் கலந்து காய்ச்சி அதை தலையில் தேய்த்து குளித்து வந்தால் மண்டை பீனிசம் காரணமாக வரும் ஒற்றைத் தலைவலி விலகும்.

www.padippakam.com



# தகவல் தொடர்பு பயிற்சி...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

காத்துக் கொள்வதன் மூலம் புறச்சக்திகளால் அடிமைப் படுத்தப்படாது சுதந்திரத்தை நினைவூட்டல்.

இதையனைத்தும்சமுதாய நலன்கருதிமேற்கொள்ளப்பட வேண்டியவை. பொதுமக்களின் கருத்தை உருவாக்குதல், கருத்துக்களையும் பிரச்சினைகளையும் நன்முறையில் விவாதிக்கச் செய்தல், பொருள் நுகர்வோரை விழிப்புடன் இருக்கச் செய்தல், தொழில் நேர்மையைப் பாதுகாத்தல் எனும் சமுதாய நீதி இதனால் பராமரிக்கப்படும்.

இக் கோட்பாடு, அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 20-ஆம் நூற்றாண்டில் உருவானது. இன்று இக் கோட்பாடு, ஆங்கிலோ அமெரிக்க நாடுகளில் சிறந்த சான்று என்ற சிறப்பினை அடைந்துள்ளது

### சோவியத் பொதுவுடைமைக் கோட்பாடு

மக்களுரிமைக் கோட்பாட்டின் வளர்ச்சியே சமுதாயப் பொறுப்புணர்ச்சிக் கோட்பாடு என்பதைப்போல, அரசுரிமைக் கோட்பாட்டின் வளர்ச்சியே சோவியத் பொதுவுடைமைக் கோட்பாடு ஆகும். எனினும் அரசுரிமைக் கோட்பாட்டில் பத்திரிகையானது அரசுக்கு உடைமையானதல்ல, மாறாக, சோவியத் பொதுவுடைமைக் கோட்பாட்டில் அரசும் பத்திரிகையும் வெவ்வேறானவை அல்ல. பத்திரிகைகள் அரசின் உடைமைகளாகவே இருந்தன இக் கோட்பாட்டின் முக்கிய குறிக்கோள்,சோவியத் பொதுவுடைமைஅமைப்பை நிலைத்திருக்கச்செய்து வெற்றி காண்பதும் சோவியத் பொதுவுடைமைக் கட்சியின் கொள்கைகளை உயர்த்துவதுமே ஆகும். இக் கோட்பாடு சோவியத் யூனியனிலும், பிறகம்யூனிஸ்டு நாடுகளிலும் கைக்கொள்ளப்பட்டது. ஆனால் இன்று அங்குப் பொதுவுடைமை ஆட்சி அகற்றப்பட்ட பின்னர் பத்திரிகைகள் பெரும்பாலும் தனியார் உடைமைகளாக ஆகியுள்ளன. பிற முதலாளித்துவ நாடுகளைப் போலவே இந்த நாடுகளிலும் இன்று பத்திரிகைகளுக்கு 'சுதந்திரம்' தரப்பட்டுள்ளது.

அரசுரிமைக் கோட்பாடு மட்டுமல்லாது பத்திரிகை வலிமை, வாயிற்காப்போன் மற்றும் நிகழ்ச்சி நிரலை ஒழுங்படுத்துதல் எனும் கோட்பாடுகளும் இக் கோட்பாட்டுடன் தொடர்பு உடையன.

பத்திரிகை வலிமைக் கோட்பாடு, தோட்டாக் கோட்பாடு, மருத்துவ ஊசிக் கோட்பாடு (Power of the Press Theory, Bullet Theory Hypodermic Needle Theory)

முதல் உலகப் போரின் போதும், அது முடிந்தவுடனுமான கால கட்டத்தில். நாஜிகளும் கம்யூனிஸ்ட்களும் மக்களைத் தமது சிந்திக்கும் திறனைப் பயன்படுத்துவதில் பயம் கொள்ளச் செய்தனர். இருட்டடிப்புச் செய்தல் நம்பிக்கை இழக்கச் செய்தல், மோசமான செய்திகள் ஆகியவையே அன்றாட வழக்கமாக இருந்தன. இங்ஙனம் அப்போதைய தகவல் தொடர்புக் கோட்பாடுகள் பத்திரிகை வலிமைக் கோட்பாடு, தோட்டாக் கோட்பாடு, மருத்துவ ஊசிக் கோட்பாடு எனப் பல பலவாறாக அழைக்கப்பட்டன. வேகமாகச் சீறிப்பாயும் தோட்டாவைப் போல விரைவாக அல்லது வியக்கத்தக்க விளைவுகளைத் தோற்றுவிக்கக் கூடிய ஆற்றல்மிக்க மருத்துவ ஊசியைப்போன்ற ஆற்றலுடன் கருத்துக்கள் அல்லது அல்லது உணர்வுகள் அல்லது அறிவு அல்லது நோக்கங்கள் பெரும்பாலும் தானாகவே ஓர் உள்ளத்திலிருந்து மற்றொன்றிற்குக் கருத்துக்கள் மற்றொன்றிற்கு மாற்றப்படுவதால், அவை இவ்வாறாகப் பெயர் பெற்றன. இங்ஙனம் ஒரு மனத்திலிருந்து மாற்றப்படும் கருத்துருவிற்கு மக்கள் தகவல் தொடர்பியலின் அனுப்பீட்டுக் கோட்பாடும் (Transportation Theory), எடுத்துச் செல்லும் சாதனக் கோட்பாடும் (Conveyor Belt Theory) மறு பெயர்களாகும்.

இதுகாறும் மேற்காட்டிய கோட்பாடுகள் தருநர் சார்ந்த கோட்பாடுகளாகும். இனி, தகவல் சார்ந்த கோட்பாடுகள் இரண்டு ஆகும். அவை, பண்பாடு காட்டிகள் (Cultural Indicators), நிகழ்ச்சி நிரல் அமைப்புக் கருதுகோள் (Agenda Setting Hypothesis) என்பனவாகும்.

### பண்பாடு காட்டிகள்

'தகவல் தொடர்பு சாதனமே தகவலாகிறது' என்ற கொள்கையை வலியுறுத்தும் மார்ஷல் மக்லூஹனுக்கு முற்றிலும் மாறாகப் பலகொள்கைவாதிகள், தகவல் தொடர்பு செயல்பாட்டின் இதயமாகத் திகழ்வது தகவல் தொடர்பு சாதனமல்ல, தகவல்தான் என்று நம்பினர்.

தகவல் அமைப்புப் பகுப்பானது, அதன் சமுதாய முன்னேற்றத்தில் புவியியல், பிறப்பு நோய் முதலிய சமுதாய நிலைப் புள்ளி விவர ஆய்வு (demography), கருத்தலகு மற்றும் செயற்பாட்டுக் கட்டமைப்பு (thematic & action strutcure) ஆகியவற்றையும், காலம் மற்றும் இடப் பரிமாணங்கள், தனி மனிதப் பண்போவியக் குறிப்புகள், பணிகள் மற்றும் ஊழ்வினைகள் என்பனவற்றையும் திட்டமிடுகின்றது: இவை, சமுதாயத்தை மேலும் ஒரு படி உயர்த்துவதாக அமைய வேண்டும் இது, ஒரே நாளில் கைகூடிவிடும் எனச்சொல்ல முடியாது. ஆனால், அனைத்து சாதனங்களும் இந்தக் குறிக்கோளிலேயே செயல்பட்டால் அது முடியாத காரியம் அன்று.

வாயில் காப்பு, நிகழ்ச்சி நிரல் அமைப்பு மற்றும் பண்பாட்டுப் படிவ விளக்கக் கோட்பாடுகள் என்பனவற்றோடு ஆய்வுக் கருவி என்ற முறையில் பண்பாடு காட்டிகள் தொடர்புடையன.

### நிகழ்ச்சிநிரல் அமைப்புக் கருதுகோள்

குறிப்பிட்ட செயல் வகைகள், பண்புகள், வெளிப்பாடுகள் மீது கவனத்தை ஈர்ப்பதன் மூலம் நமது சமுதாயத்தின் புலனுணர்வினை நிகழ்ச்சி உள்ளடக்கம் வடிவமைக்கின்றது. அதைப்போல, அரசியல் பிரச்சினைகள் மீதும் நன்கறிந்த பிற விஷயங்கள் மீதும் ஏற்படுகின்ற ஈடுபாடுகளின் அளவு பற்றி விளக்குவதன் மூலம் தகவல் தொடர்பு சாதனங்கள், பொது மக்கள் விவாதத்திற்கு ஒரு நிகழ்ச்சி நிரலை அமைத்துவிடுகின்றன. தகவல் தொடர்பு சாதனங்களுக்கும் தகவலின் இன்றியமையாமைக்கும் இடையில் உள்ள நேரடியான, திட்டவட்டமான உறவுமுறையானது மக்கள் மனதில் இருக்கின்றது என நிகழ்ச்சி நிரல் அமைப்புக் கருதுகோளானது ஏற்றுக்கொள்கின்றது இந்த உறவுமுறையானது காலப்போக்கில் ஏற்பட்ட காரண காரிய இயைபுள்ள சொற்களில் (Casual Terms) பின் வருமாறு குறிப்பிடப்படுகின்றது: கின்ற தகவலை ஏற்கின்றோமா இல்லையா என்ற முடிவின் மீது தகவல் தொடர்பு சாதனங்களில் எது முக்கியமானது என்ற முடிவு மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கு, போஃபர்ஸ் ஊழல் பற்றிய செய்தி வெளியீடு எல்லோருக்கும் தெரிந்ததொரு சான்றாகும். இதனை வெளிப்படுத்தியது பத்திரிகை சாதனமே. அதாவது, போஃபர்ஸ் ஊழல் பற்றிய தகவலின் மதிப்பைத் தேர்ந்தெடுக்கும்போது பத்திரிகை எனும் சாதனத்தையே நாம் முடிவு செய்கிறோம். ''பலவற்றுள் தேர்ந்தெடுத்து எதைச் சிந்திப்பது என்று மக்களுக்கு சொல்வதில் பத்திரிகை பெரும்பாலும் வெற்றி அடைவதில்லை; ஆனால், தேர்ந்தெடுத்த ஒன்றனுள் எதைப்பற்றிச் சிந்திப்பது என்று வாசகர்களுக்குச் சொல்வதில் அது வியக்கத்தக்க வெற்றியடைகின்றது'' என்று பெர்னார்ட் கோஹென் (Bernard Cohen), சுருக்கமாகக் கூறுகிறார்.

இவ்வாறு விவாதத்திற்கு அல்லது கவனத்திற்கு உரிய நிகழ்ச்சி நிரலை அமைத்துத் தரும்படியான நிகழ்ச்சி நிரல் அமைப்புக் கருதுகோளானது பத்திரிகை வலிமைக் கோட்பாடு என்பதிலிருந்து வந்ததாகும். இது, வாயில் காப்போன் கொள்கையுடன் தொடர்புடையது.

இனி, தருநரிடமிருந்து பெறுநருக்குத் தகவலைக் கொண்டு செல்லும் தகவல் தொடர்பு சாதனம் சார்ந்த கோட்பாடுகள் இரண்டு. அவையாவன: மக்லூஹன் கோட்பாடுகள் (Mcluhan's Theories), N-படிப்போக்கு மாதிரிகள் (N-Step Flow Models).

(தொடரும்)

## முதுகுவலி போகலையா?

முதுகு வலி. முதுகுவலி யாரைக் கேட்டாலும் முதுகுவலி எங்கு வேலை செய்பவர்களைக் கேட்டாலும் மூதுகுவலி.

இப்படி முதுகுவலி ஏன் ஒரேயடியாய் ஆட்டிப் படைக்கிறது? முதுகுவலி இன்று நேற்றல்ல மனிதர்களுக்கு ஆரம்ப காலம் தொட்டே இருந்து வருகிறது.

மனிதர்கள் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு நகர்ந்து சென்று வேலை பார்ப்பது குறைந்து ஒரே இடத்தில் உட்கார்ந்து வேலை பார்க்கும் நிலை வந்துவிட்ட பின்பு இந்த முதுகுவலி வேகமாகத் தாக்க ஆரம்பித்துவிட்டது.

மனிதர்களுக்கு முதுகுவலி ஏற்பட முக்கிய காரணம் வேடிக்கையானது. ஏனென்றால் மனிதனின் முதுகெலும்பு நிமிர்ந்து நிற்பதற்கு உதவும் வகையில் அல்லாமல் விலங்குகளுக்கு இருப்பது போன்ற அமைப்பில் அமைந்திருக்கிறது. ஆரம்ப காலத்தில் மனிதன் தவழ்ந்தே பல நூற்றாண்டுகள் வாழ்ந்துள்ளான். பிறகு தான் படிப்படியாக இரண்டு கால்களில் நடக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டான்.

தவழ்ந்து நடந்தபோது முதுகெலும்பின் இயக்கம் புவி ஈர்ப்பு விசைக்கு ஏற்ப இருந்தது. இயற்கையான நிலையை மாற்றிய பின்பு புவிஈர்ப்பு நிலைக்கு அப்பால் போனதால் உடம்பின் கனமான பகுதிகளை தாங்கும் பொறுப்பும் முதுகெலும்புக்கு வந்துவிட்டது.

சரி முதுகுவலியை தவிர்ப்பது எப்படி?

நீங்கள் நிமிர்ந்த நிலையில் வேலை செய்வதை வழக்கப் படுத்திக் கொள்ளுங்கள்.

உட்காரும் நாற்காலி கூட நேரான நிலையில் இருக்க வேண்டும்.

உடலில் கூடுதல் எடைபோட விடாதீர்கள். எடை கூடினால் முதுகு வலியும் சேர்ந்து விடும்.

மாதவிலக்கு நிரந்தரமாக நின்றபின் பெண்களுக்கு முதுகுவலி வர வாய்ப்பு அதிகம். ஏனெனில் எலும்புகளில் கல்சியம் சத்து அப்போது குறையும். இதனால் முதுகெலும்பும் பலவீனம் அடைந்து முதுகு வலி ஏற்படும்.

எனவே கல்சியம் அதிகம் உள்ள உணவுப் பொருட்களையும் வைட்டமின் 'டி' உணவுகளையும் அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

முதுகெலும்பின் இயக்கம் அதனைச் சேர்ந்திருக்கும் தசைகளையும் சார்ந்துள்ளது. இந்த தசைகளை தினமும் உடற்பயிற்சி செய்வதன் மூலம் வலுவாக வைத்துக் கொள்ளலாம். அதோடு முதுகெலும்பு அருகே அனாவசியமான ஊளைச் சதை எடையும் குறைந்து விடும். முதுகு வலியை நீக்க வேண்டும் என்பதற்காக கடுமையான மசாஜ் செய்யக் கூடாது.முறைப்படி சிகிச்சை பெறவேண்டும்.

விட்டு விட்டு முதுகு வலி ஏற்பட்டாலும் டாக்டரை அணுகி சிகிச்சை பெறுவது நல்லது.

மிக உயரமான ஹைஹீல்ஸ் செருப்பு அடிக்கடி அணிவதை தவிர்க்க வேண்டும். நீண்ட நேரம் அணியக் கூடாது.

## அஞ்சலட்டை

உலகில் முதல் முதலாக ஒஸ்ரியா நாட்டில் 07.10. 1869ல்தான் அஞ்சலட்டை அறிமுகப்படுத்தப்பட்டது.

கிராஸ் நகரில் இம்மானுவல் ஹெர்மன் என்ற பேராசிரியர் மலிவான விலையில் தபால் அனுப்புவது எப்படி அமைப்பது என்பது பற்றி பத்திரிகை ஒன்றில் கட்டுரை எழுதினார். அந்த யோசனையை ஒஸ்ரிய அரசு ஏற்றதன் விளைவே அஞ்சலட்டை தோன்றக் காரணம்.

இது முதலில் ஒஸ்ரிய நாட்டினரால்'கொரஸ்பாண்டிங் கார்டே' என்று தான் சொல்லப்பட்டது. பின்னர் அமெரிக்காவில் இது புழக்கத்துக்கு வந்தபோது இது 'போஸ்டல் கார்ட்' என்று அழைக்கப்பட்டது. பிறகு அது சுருங்கி போஸ்ட் காட் ஆயிற்று.

பிரிட்டனில் போஸ்ட்கார்ட் 1870ம் ஆண்டு தான் முதன் முதலாக வெளியிடப்பட்டது. இது வெளியிடப்பட்டபோது, அதை வாங்க தபால் கந்தோரில் மக்கள் கூட்டம் அலை மோதியதாம். பின்னர் பொலிசாரை வைத்துத்தான் அக் கூட்டத்தைக் கட்டுப்படுத்தினார்களாம்.

படிப்பகம்

www.padippakam.com



# 'புலிகள் மீதான அமெரிக்கத் தடையின் உள்நோக்கம் என்ன?'

(சென்ற இதழ் தொடர்ச்சி)

இதன் பின்னர் சிரமான முறையில் அமெரிக்க அரச திணைக்களம் எல் ரி. ரி. ஈ. யினது பயங்கரவாதச் செயல்களைக்கண்டிக்கும் அறிக்கைகளை வெளியிட்டது. இதன் பின்புதான் அமெரிக்காவின் செனட் சபை எல். ரி. ரி. ஈ. இயக்கத்தைப் பயங்கரவாத அமைப்புகளுடன் சேர்க்க ஏகமனதாகத் தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது என்றாலும் அமெரிக்க அரச திணைக்களம் கனடாவின் நீதிமன்ற நடவடிக்கைகள் முடிவு பெறும்வரை காத்திருந்தது.

உடனடியாக எல். ரி. ரி. ஈ. இயக்கத்தைத் தடை செய்தால் எல் ரி. ரி. ஈ. இயக்கம் அமெரிக்க நீதிமன்றத்தின் உதவி நாடி சட்ட ஓட்டைகளுக்குள் நழுவிச் சென்றுவிடக்கூடும் என்பதை அவர்கள் கனடாவின் வழக்கு மூலமாக புரிந்து வைத்திருந்தனர். இவ்வாறு ஏதேனும் நடைபெற்றால் அது அமெரிக்காவின் லிபரல் வாதத்துக்கு வெட்கக்கேடானது எல். ரி. ரி. ஈ. அமைப்பினை தடை செய்யும் தீர்மானத்தை கடனா வழக்கின் தீர்வின் பின்னர் எடுத்தார்கள் என்றும் கூறமுடியும்.

கொழும்பில் அமெரிக்க வர்த்தகக் கட்டிடத் தொடர் குண்டு வெடிப்பினால் தகர்க்கப்பட்ட பொழுது அமெரிக்க ஜனாதிபதிக்கு தனது கவலையைத் தெரிவித்து பிரபாகரன் ஒரு கடிதம் எழுதி இருந்தார். அமெரிக்க அரச திணைக்களத்தின் தெற்காசியாவுக்குப் பொறுப்பான திரு. ரொபின் ரபாஸல் இலங்கைக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்த சமயம் புலிகள் இயக்கத்துக்கு சார்பான முறையில் கருத்துத் தெரிவித்திருந்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் கொழும்பின் மக்கள் தொடர்புச் சாதனங்கள் அவரை வன்மையாக கண்டித்த சமயம் எல்.ரி.ரி.ஈ. யினரின் தொடர்புச் சாதனங்கள் அவரைப் புகழ்ந்தன.

எனினும் அமெரிக்க கிறீன் பிரேட்ஸ் இராணுவம் இலங்கை வந்து வீரவிளையில் வைத்து இலங்கை இராணுவத்துக்கு பயிற்சியளிக்கும் பொழுது பிரபாகரன் குழப்பமடைந்தார். சர்வதேச மக்கள் தூதுவராலயப் பிரிவுகள் மத்தியில் பிரபலமான புலிகளின் உத்தியோக பூர்வ பத்திரிகையான 'ஹொட் ஸ்பிரிங்' பத்திரிகையில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுதருக்கு ஒரு பகிரங்க கடிதம் எழுதப்பட்டிருந்தது. 'அப்பாவி தமிழ் மக்களைக் கொல்ல இலங்கை அரசுக்கு உதவி செய்து உங்கள் கரங்களில் இரத்தத்தைப் பூசிக் கொள்ளாதீர்கள்'' என இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இலங்கை அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான யுத்த நிறுத்த ஒப்பந்தம் முறிவடைந்ததும் இதற்கான காரணங்களைத் தெளிவுபடுத்த அமைச்சர் பேராசியர் பீரிஸ் அமெரிக்க அரச திணைக்களத்துக்கு செல்லுமுன்னர் புலிகளின் சர்வதேசப் பேச்சாளர் லோரன்ஸ் திலகர் அரச திணைக்களத்தின் அதிகாரிகள் சிலரை சந்தித்தமை அரசின் விருப்பின்மைக்கு ஆளாக்கியது.

இதற்கும் மேலாக ஒரு முறை அமெரிக்க செனட் சபை உறுப்பினர் ஒருவர் இலங்கை அரசிற்கும் புலிகள் இயக்கத்துக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளில் அமெரிக்கா மத்தியஸ்தராக கடமையாற்றவேண்டும் என யோசனை தெரிவித்திருந்தார். இவற்றுக்கெல்லாம் முக்கிய காரணம் அமெரிக்க அரச திணைக்களத்துடனும் செனட் சபையுடனும் அங்கு வசிக்கும் இலங்கைத் தமிழ் அறிவு ஜீவிகள் கொண்டிருந்த தொடர்புகளே. வாஷிங்டனில் இருந்த இலங்கைத் தூதுவரான தனபால் இந்த நிலையை மாற்றியமைத்தார்.

இவர் எமது வெளிநாட்டமைச்சர் திரு. லக்ஷ்மண் கதிர்காமரின் சர்வதேச மக்களை வென்றெடுக்கும் நடவடிக்கைகளுக்கமைய யாழ்ப்பாணத்தில் ரிவிரெச நடவடிக்கை முன்னணிக்கு வரும் பொழுதில் அமெரிக்காவில் பலரையும் சந்தித்துப் பேசினார். அத்துடன் 'ஹொட் ஸ்பிரிங்' பத்திரிகையை முன்வைத்து சிங்கள மக்கள் பற்றி பேசக்கூடியதொரு ஆங்கிலப் பத்திரிகையையும் ஆரம்பித்தார். எல். ரி. ரி. ஈ. இயக்கத்துக்கு எதிரான ஊர்வலங்களையும் ஏற்பாடு செய்தார்.

இவ்வாறு ஊர்வலங்களின் மூலம் சென்று செனட் சபை உறுப்பினர்களையும் அமெரிக்க அரச திணைக்கள அதிகாரிகளையும் சந்தித்து காரணங்களை எடுத்துக் கூற சிங்கள மக்களுக்கு வழி அமைத்துக் கொடுத்தார். ஐரோப்பிய நாடுகளுள் இவ்வாறானதொரு அமைப்பு அமைக்கப்பட்டமை இதுவே முதன்முறையாகும்.

அமெரிரிக்க செனட் சபையினுள் எல். ரி. ரி. ஈ. பற்றிய அபிப்பிராயங்கள் வேறுபட இவை காரணமாயின. அமெரிக்காவில் வாழ்ந்து வந்த சிங்கள மக்கள் இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டதுடன் இவற்றுக்குச் சமமான முறையில் சந்திரிகாவின் அரசு முன்வைத்திருக்கும் தீர்வுப் பொதி குறித்து மேற்கொண்ட பிரச்சார நடவடிக்கைகளும் அரசின் மனித உரிமைகள் தொடர்பான அறிக்கையும் அமெரிக்காவில் எல்.ரி.ரி.ஈ.யினருக்கு இருந்த நிலையைத் தலைகீழாக மாற்றியது.

இறுதியாக பிரபாகரன் கிழக்கில் அரசியல் நடத்திவரும் ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் அமெரிக்க விஜயத்தை நம்பினார். இவர் இலங்கை அரசுக்கு அமெரிக்கா ஆயுதம் வழங்கக் கூடாது எனக்கேட்டுக் கொண்டார். இவரது இந்த வேண்டுகோளுக்கு அமெரிக்கா இணங்கியதாக இல்லை.

அமெரிக்க எல். ரி. ரி. ஈ. இயக்கத்தினை அமெரிக்கா மீதுள்ள அக்கறைக்காகவே தடை செய்தது அன்றி எம் மீதான அக்கறை குறித்து அல்ல. இத்தடை தொடர்பாக அமெரிக்கா வெளியிட்டுள்ள அறிக்கையில் இது தெளிவாகின்றது. எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தை மட்டுமல்ல ஏனைய இயக்கங்களையும் அமெரிக்க மக்களின் நலன் கருதியே அமெரிக்கா தடை செய்துள்ளது என்பது இதன் மூலம் தெளிவாகின்றது. இதன் மூலமாக அமெரிக்கா மூன்று விடயங்களை அடைய முயல்கின்றது.

ஒன்று இவ்வாறான பயங்கரவாதிகளை உபயோகித்து அமெரிக்காவினுள் குண்டு வெடிப்புகள் இடம் பெறாதிருக்கவும் கிளர்ச்சிகள் தோன்றாதிருக்கவும் வழி பார்த்துக் கொள்ளுதல். இரண்டு- பயங்கரவாதத்துக்கு எதிராக குரல் கொடுத்தவாறு பயங்கரவாதத்தால் பிரச்சினைக்குள்ளாகிய

**சிங்களத்தில்: உபுல் ஜோசப் பெர்ணாந்து**

**தமிழில்: இப்னு அஸூமத்**

நாடுகளை வென்றெடுத்து மீண்டும் தனது அதிகாரத்தினை நிலைநாட்டிக் கொள்ளுதல், மூன்றாவது-பயங்கரவாதத்தை யொட்டி தம்மால் கூட கட்டுப்படுத்த முடியாதவாறு சர்வதேச ரீதியாக வியாபித்திருக்கும் ஊழல், மோசடிகளை ஒழித்தல்.

இந்தத் தடை ஒரு குறிப்பிட்ட காலத்துக்கே விதிக்கப்பட்டிருக்கின்றது. இந்தத் தடையின் மூலமாக பயங்கரவாதத்தினால் பிரச்சினைக் குள்ளாகி இருக்கும் நாடுகளை அமெரிக்கா ஆட்டிப்படைக்க முடியும். அதே நேரம் பயங்கரவாத இயக்கங்களையும் கட்டுப்படுத்தித் தனது கைக்குள் கொண்டு வர அமெரிக்காவுக்கு முடியும்.

அதிகம் பேசினால் தடை உத்தரவை நீக்குவோம் என்றோ, நீடிப்போம் என்றோ இரு பிரிவினருள் ஒரு பிரிவுக்கு எச்சரிக்கை விடுக்க முடியும். இந்தத் தடை உத்தரவு உண்மையிலேயே இலங்கை அரசின் இராணுவ மற்றும் சமாதான நடவடிக்கைகளுக்கு தைரியத்தை அளிக்கின்றது. அதே நேரம் இது புலிகள் இயக்கத்தின் பாதுகாப்பு மற்றும் அரசியல் நடவடிக்கைகளுக்குக் கிடைத்துள்ள தோல்வியாகும்.

என்றாலும் இன்று இரண்டில் ஒன்று நடந்தாக வேண்டியுள்ளது. ஒன்று அமெரிக்காவின் நல்லெண்ணத்தைப் பெற பிரபாகரன் சமாதானத்துக்காக இலங்கை அரசை அழைக்க வேண்டும். இல்லையேல் மேன்மேலும் அமெரிக்காவைத் திருப்திப்படுத்துவதால் பலனில்லை என்பதை உணர்ந்து இந்த யுத்தத்தை மிகவும் கொடூரப்படுத்த முடியும். இவ்வாறு செய்து அமெரிக்காவுக்கு எதிரான உலக சக்திகளுடன் கைகோர்த்துக் கொள்ள பிரபாகரனுக்கு இயலும். தடை உத்தரவின் பலாபலன் இவை மட்டுமே.

இதனால் அமெரிக்காவில் ஈழக்கோரிக்கைக்கு எதுவித பாதிப்பும் நிகழாது. காரணம் இந்தக் கோரிக்கையானது எல். ரி. ரி, ஈ. நாமத்தின் கீழ் கோரப்படாமையே ஆகும்.

இந்தியா எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தினைத் தடை செய்து நீண்ட காலமாகிறது. எனினும் இன்றும் கூட எல்.ரி.ரி.ஈ. இயக்கம் தனது சர்வதேச தொடர்புகளை இந்தியா ஊடாகவே நடத்தி வருகின்றது. அண்மையில் புலிகள் இயக்க சர்வதேசப் பேச்சாளர் லோரன்ஸ் திலகர் இந்தியா ஊடாகவே கிளிநொச்சி வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆக, தடை மேல் தடையின் எல்லையானது இவ்வளவு தான்.

நன்றி: 'வீரகேசரி'

## பளை வைத்தியசாலைக்கு படையெடுக்கும் நோயாளர்கள்

சாவகச்சேரி, மீசாலை கொடிகாமம் பகுதிகளில் இருக்கும் நோயாளர்கள் சிகிச்சைக்காக இப்போது பெருமளவில் பளை அரசினர் வைத்திய சாலைக்குச் சென்று வருகின்றனர்.

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் தமது நோய்களுக்கான சிகிச்சையைத் திருப்திகரமாகப் பெற முடியாமல் இருப்பதாகவும் அங்குள்ள ஊழியர்கள் நோயாளர்களுடன் நல்ல முறையில் பழகத் தவறியுள்ளனர் எனவும் அறியப்படுகின்றது.

இதன் காரணமாக பல மைல்களுக்கு அப்பால் உள்ள பளை அரசினர் வைத்திய சாலையை மக்கள் நாடிச் செல்கின்றனர்.

அதேவேளை சாவகச்சேரி மாவட்ட வைத்திய சாலையில் டாக்டர்கள் பற்றாக்குறை நிலவுவதாகவும் தெரியப்படுகின்றது.

மேலும் பளை அரசினர் வைத்தியசாலையில் நோயாளர்களின் வருகை எப்போதும் இல்லாதவாறு அதிகரித்துக் காணப்படுவதாக வைத்திய சாலை வட்டாரங்களில் இருந்து அறியவருகின்றது.

## குள்ளூர்ச்சந்தை அகதி மாணவர்கள் வெளியூர்களில் சாதனை

18-1-98ல் விருதுநகர் ''அத்தலெடிக் கிளப்'' நடத்திய மாநில அளவிலான ஆண்களுக்கான 10 கிலோ மீட்டர் ஓட்டப் பந்தியத்தில் மாணவர் எஸ். லவேந்திரன் 3ம் இடத்தை அடைந்து கேடயமும் சான்றிதழும் பெற்றுள்ளார். பெண்களுக்கான போட்டி ஒன்றில் மாணவிகள் பெரு. சிவ மலர் (1ம் இடம் கேடயம்) எஸ்- பரமேஸ்வரி (2ம் இடம். பிரஷர் குக்கர்) எஸ். மதிவதனி (3ம் இடம் சில்வர் குடம்) பெற்றுள்ளனர்!

4-2-98ல் சிவகாசி ''அரசன் கணேசன் பாலிடெக்னிக்' நடத்திய வருடாந்திர விளையாட்டு போட்டியில் மாணவர் எஸ். லவேந்திரன் 1500 மீட்டர் ஓட்டப் பந்தியத்தில் 2-ம் இடத்தை அடைந்து சான்றிதழும் சில்வர் தட்டும் பெற்றுள்ளார்.

தகவல் :
கே. எஸ். காளிமுத்து

படிப்பகம்

www.padippakam.com



# ஜனநாயகத்திலிருந்து மக்கள் வெகுதூரம் தள்ளப்பட்டுள்ளனர்

# குடாநாட்டில் மக்கள் சுதந்திரமாக நடமாட முடியவில்லை!

### யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையகம் அறிக்கை

1997ஆம் வருடத்தில் ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் ஏதும்இடம் பெறாமை மிக்க வேதனையை ஏற்படுத்தி விட்டது. மக்களது விரக்திகளையும் அவலங்களையும் தீர்ப்பதற்கு ஏதுவாக புனர்வாழ்வு, புனரமைப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். ஜனநாயகத்தில் இருந்து வெகு தூரம் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். குடாநாட்டில் மக்கள் சுதந்திரமாக நடமாட முடியாமல் உள்ளது. குடாநாட்டுக்குள்ளேயே விடுவிக்கப்பட்ட விடுவிக்கப்படாத பகுதிகள்இன்னமும்இருக்கின்றன. வீதித் தடைகளில் திடீர் பரிசோதனைகள் சுற்றிவளைப்புகள் பொதுவான காட்சிகளாகிவிட்டன. இவ்விதமான நடவடிக்கைகளால் மக்கள் களைத்துப் போயுள்ளனர்.

இவ்வாறு யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் இணையத்தினால் கொழும்பில் இருக்கும் மனிதநேய அமைப்புகளின் ஒன்றியத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட ஜனவரி மாதத்துக்கான குடாநாட்டு நிலவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

#### மக்கள் புறக்கணிப்பு

இணையத்தின் தலைவர் எஸ். பரமநாதன், செயலாளர் ஏ. கே. சிவசுப்பிரமணியம் ஆகிய இருவராலும் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்ட மூன்று பக்க அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடபகுதியில் மாநகர, நகர, பிரதேச சபைகளுக்கான உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்தப்பட்டன, தேர்தல்களில் போட்டியிட்ட அரசியல் கட்சிகளைத் தவிர மக்கள் இத்தேர்தலில் எந்தவிதமான அக்கறையும் ஆர்வமும் காட்டாமல் இருந்தனர். ஜனநாயகம் இல்லாத தேர்தல் எதற்கு? என்பதே மக்களது குரலாக இருந்தது. பல்வேறு மட்ட பிரசார யுக்திகள் முயற்சிகளுக்கும் மத்தியில் தேர்தலில் வாக்களிக்கப்பட்ட விகிதாசார 18.4 ஆகும் 5 லட்சத்து 71 ஆயிரத்து 486 பேர் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களாக இருந்தும் 1 லட்சத்து 5 ஆயிரத்து 413 வாக்குகள் மட்டுமே அளிக்கப்பட்டுள்ளன. 11 ஆயிரத்து 838 வாக்குகள் நிராகரிக்கப்பட்டன. தேர்தலில் மக்கள் எவ்விதமான அக்கறையும் காட்டவில்லை என்பதை இது புலப்படுத்தியுள்ளது.

1995 அக்டோபரில் இடம் பெற்றிருந்த மாபெரும் மக்கள் இடம் பெயர்வதை தொடர்ந்து மாவட்டத்தின் கல்வி நிலை பொதுவாக கீழ் நிலை நோக்கியே உள்ளது. க. பொ. த. (உயர்தரம்) க.பொ.த.(சாதாரணம்)5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் முடிவுகள் 1995-ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த நிலையுடன் ஒப்பிடுகின்ற போது மிகவும் கீழ் நிலையிலேயே உள்ளது.

யாழ்ப்பாணத்து மனிதனது பொருளாதாரம் கல்வி நிலையாகவே பல தசாப்தங்களாக இருந்து வந்துள்ளது. பல்கலைக்கழக புகுமுக அனுமதியிலும் வருடாந்த வீழ்ச்சி தென்படுகின்றது. 97/98 கல்வி ஆண்டுகளுக்கு 664 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளனர்

#### சுகாதாரச் சீர்கேடு

யாழ் மாவட்டத்தில் வைத்தியர் பற்றாக் குறை, மருந்து தட்டுப்பாடு, வைத்திய நிபுணர்கள் தட்டுப்பாடு பற்றிய செய்திகள் செய்தி ஊடகங்களில் வழமையாகி விட்ட அம்சங்களாகும். மலேரியா நோய் அதிகரித்த நிலையிலேயே உள்ளது. அதே போல் செப்ரிசீமியா வயிற்றுளைவு போன்ற வியாதிகளும் உயர்ந்த வண்ணம் உள்ளன.

குடாநாட்டில் மிதிவெடிகள் அகற்றும் பணிகள் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை. ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழு இதுவரை இவ்விடயமாக எவ்விதமான கருத்துக்களும் வெளிப்படுத்தப்படாமல் உள்ளன.

1998 ஜனவரி மாதத்தில் 2154 பேர் குடாநாட்டுக்குள் வந்துள்ளனர். இவற்றுள் 558 பேர் குருநகர் இறங்கு துறையூடாக வந்துள்ளனர். இம்மக்கள் சிறைச்சாலை கட்டிடத்தில் தங்க வைக்கப்பட்டு உணவு மருந்து வகைகள் அரசினால் வழங்கப்படுகின்றன. இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் மருந்து வகைகளை வழங்கி ஆதரவளிக்கின்றன.

விடுவிக்கப்பட்ட விடுவிக்கப்படாத பகுதிகளில் கொள்ளை, திருட்டுச், சம்பவங்கள் மிகவும் பொதுவானவைகளாக காணப்படுகின்றன ஊரடங்கு வேளைகளிலும் ஏனைய நேரங்களிலும் குற்றவாளிகளும் சமூகவிரோதிகளும் சட்டத்தை மதித்து நடைபெறுகின்றது போலத் தெரிவதில்லை.

யாழ்ப்பாண மாநகர சபையின் அருகில் இயங்கி வந்த நூலகப் கச்சேரிக்கு அண்மையிலுள்ள ஒரு விசாலமான கட்டிடத்துக்குத் தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. மாபெரும் திறப்பு விழா வைபவம் நடைபெற்ற போதிலும்கூட அதில் பங்கு பற்றும் வாய்ப்பு மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் வழங்கப்படவில்லை.

மரக்கறிக்கான சந்தை வாய்ப்பினை யாழ்ப்பாணத்துக்கு வெளியே ஏற்படுத்த உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். 23-12-97ல் அரச செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட விவசாயக் கூட்டத்தில் கப்பல் மூலம் வெங்காயமும், குளிஉக் கிழங்கும் கொழும்புக்கு அனுப்பப்படுவதற்கு ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அரச அதிபரால் வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்த போதிலும் எதுவுமே நடைமுறையில் காணப்படவில்லை.

சீமெந்து வெளிச் சந்தையில் 600 ரூபாவாக விற்கப்படுகின்றது. மாவட்டத்தின் புனர்வாழ்வுக்கும் புனரமைப்புக்கும்பொறுப்பான அதிகாரிகள் மாவட்டத்தில் சீமெந்து விநியோகத்தினை கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கள் போன்றவற்றில் மக்கள் சீமெந்தை இலகுவில் கொள்வனவு செய்யக் கூடிய நிலையை ஏற்படுத்த வேண்டும். கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் பலநோக்குக் கூட்டுறவு சங்கங்களில் மக்கள் சிரமமின்றி சுலபமாக சீமெந்தைப் பெறமுடியாமல் இருப்பதாகப் பொதுவான குற்றச்சாட்டு நிலவுகின்றது.

இந்த குடாநாட்டு நிலைவர அறிக்கையின் பிரதிகள் வட மாகாண புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபை, யாழ் அரச அதிபர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

# இலங்கையில் போரை நிறுத்தி அரசியல் தீர்வுகாண இருதரப்பையும் ஐ. நா. சபை தூண்ட வேண்டும்

### அவுஸ்திரேலிய திருச்சபை கூட்டத்தில் தீர்மானம்

இன மோதலுக்கு அரசியல் தீர்வு காணவும், தமிழ் மக்கள் தமது அரசியல் அந்தஸ்தைத் தீர்மானிக்கும் பொருட்டு அவர்தம் உரிமையை அங்கீகரிக்கவும் இலங்கை அரசாங்கத்தையும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உட்பட இலங்கை தமிழ் சமூகத்தின் அனைத்து தலைமைத்துவத்தையும், ஐக்கிய நாடுகள் பொதுச்சபை தூண்ட வேண்டும் என்று ஆவுஸ்திரேலிய அங்கிலிக்கன் திருச்சபையின் பதினோராவது பொதுமாநாடு கேட்டுக் கொண்டிருக்கிறது.

கடந்த பெப்ரவரி 1? ஆம் திகதி அவுஸ்திரேலிய அங்கிலிக்கன் திருச்சபையின் பதினோராவது பொது மாநாடு நடைபெற்றது. அப்போது மேற்கண்ட தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அதன் அறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

அவுஸ்திரேலிய அங்கிலிக்கன் திருச்சபையின் பதினோராவது பொது மாநாட்டின் அங்கத்தவர்களாகிய நாம், இலங்கையின் தற்போதைய நிலைகுறித்து தேவாலயத்தினதும் பரந்த அவுஸ்திரேலிய சமூகத்தினதும் கவனத்தை வேண்டுவதுடன் நாம் பின் கண்டவற்றை ஏற்கின்றோம்.

பெரும்பான்மைச் சிங்களவர்களுக்கும் சிறுபான்மை தமிழ்ச் சமூகங்களுக்கும் இடையில், இனத்துவ வேறுபாடுகளின் அடிப்படையில் சிவில் யுத்தம் நடைபெறுகிறது.

#### ஐ. நா. செயற்பாடு

இலங்கைத் தமிழ் மக்கள் தமது அரசியல் அந்தஸ்தைத் தீர்மானிக்கும் பொருட்டு அவர்கள் தம் உரிமையை அங்கீகரிக்கவும், இன மோதலுக்கு அரசியல் தீர்வுகாணவும், இலங்கையில் அனைத்து மக்களுக்கும் பூரண மனித உரிமைகளை உறுதிப்படுத்தவும் இலங்கை அரசாங்கத்தையும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உட்பட இலங்கைத் தமிழ்ச் சமூகத்தில் அனைத்துத்தலைமைத்துவத்தையும் தூண்டுமாறு ஐ நா. பொதுச்சபையை இப்பொது மாநாடு கோருகின்றது.

அத்துடன் மோதலில் ஈடுபட்டிருக்கும் இருதரப்பினருக்கும் ஆயுதங்கள், தளபாடங்கள், கண்ணிவெடிகள் மற்றும் எல்லாவிதமான ராணுவ ஆதரவை வழங்குகின்ற ஏஜென்ஸியையும், நாடுகளையும் அவ்விதமான நடவடிக்கைகள் அனைத்தையும் உடனடியாக

(?-ம் பக்கம் பார்க்க)

# கண்ணிவெடி காரணமாக குடாநாட்டில் மீள் குடியேற்றம் பாதிக்கப்பட்டுள்ளது

### யாழ். செயலகம் அறிவிப்பு

யாழ் மாவட்டத்தில் அதி பாதுகாப்பு வலயமாக பிரகடனம் செய்யப்பட்ட இடங்கள் மற்றும் கடந்த காலங்களில் புலிகள் இயக்கத்தினரால் கண்ணி வெடி புதைக்கப்பட்ட இடங்களில் கண்ணி வெடிகள் அகற்றப்படாத காரணத்தினால் யாழ் மாவட்டத்தில் பொது மக்களை மீண்டும் பழைய இடங்களில் குடியமர்த்தும் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ் அரசாங்க செயலகம் கொழும்புக்கு அறிவித்துள்ளது.

யாழ் மாவட்டத்தில் உள்ள கண்ணி வெடிகளை அகற்றுவது தொடர்பாக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிலையத்தின் சார்பில் நான்கு நிபுணர்கள் அண்மையில் யாழ் சென்று ஆராய்ந்து அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளனர். அந்த அறிக்கைக்கு பாதுகாப்பு அமைக்க இன்னமும் அங்கீகாரம் வழங்கவில்லை.

பாதுகாப்பு படை முகாம்களை சுற்றி பாதுகாப்பு படையினரால் புதைக்கப்பட்ட கண்ணி வெடிகளை பாதுகாப்பு படையினர் அடையாளம் காட்டியுள்ளனர். ஆனால் புலிகள் இயக்கத்தினரால் புதைக்கப்பட்ட கண்ணி வெடிகளை கண்டு பிடிப்பது கஷ்டமாக உள்ளது. புதைக்கப்பட்ட கண்ணி வெடிகளும் பெய்த பெரும் மழை காரணமாக அடையாளம் தெரியாமல் உள்ளதால் அவற்றை வெளியே எடுப்பது கஷ்டமாக உள்ளது என பாதுகாப்பு படை வட்டாரங்கள் தெரிவித்தன.

பாதுகாப்பு படை முகாம்களைச் சுற்றி சில இடங்கள் அதி பாதுகாப்பு பகுதியாக பிரகடனம் செய்யப்பட்ட இடங்களில் அப்பகுதிஉரிமையாளருக்கு அப்பகுதிகளில் விவசாயம் செய்ய அனுமதிக்கப்படுகிறது. ஆனால் அந்த காணியில் குடியேற பாதுகாப்பு படையினர் அனுமதி மறுத்து வருகின்றனர். இதனால் யாழ் மீள் குடியேற்றத் திட்டம் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதே வேளை கடந்த வருடம் யாழ் மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு செலவழிக்கப்பட்ட கணக்கு பிப்ரவரி மாதமாகியும் சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் இந்த வருடத்திற்கான நிதி இன்னும் ஒதுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

படிப்பகம்

www.padippakam.com






## அமெரிக்கர் அச்சம்!

கன நாளைக்குப் பிறகு சுப்பையர் பெரிய பெரிய செய்திக் கட்டுகளோடு வந்தமர்ந்தார்.

வாங்கோ சுப்பையாண்ணை! எங்க சொம்ப நாளை உங்களைக் காணேல்ல?

ஒரே வெய்யில் மோன. அதோட எனக்குக் கொஞ்ச வெளி வேலைகள் அதிகம். அதுதான் வர முடியேல்ல.

சரி...சரி...கொஞ்ச நியூஸ் இருக்கு. சொல்றன் கேள்.

அமெரிக்காவில் புலிகளை பயங்கரவாத இயக்கம் எண்டு தடை போட்டவையோ, ஆனாலும் அவைக்கும் புலிப் பயம் போகேல்ல கண்டியோ. ஏன் தெரியுமே.

இலங்கையில நீண்ட காலமாக சமூகப் பணிக்கெண்டு சொல்லி அமெரிக்க சமாதானப்படை அங்கே இருக்குது கண்டியோ, புலிகள் அடிக்கடி கொழும்பில் குண்டுகள் வைக்கிறதால் அமெரிக்க சமாதானப் படை மேலையும் தங்களுடைய கோவத்தை காட்டிப் போடுவினம் எண்டு பயப்படுயினமாம். இவையை திரும்பவும் "அமெரிக்காவுக்கு எடுக்கிறதா இல்லையா என ''டிஸ்கஷன்'' நடக்குதாம் தம்பி.

அமெரிக்கா செய்யிற கூத்துகளில இதுவும் ஒண்டு கண்டியோ.

யாழ்ப்பாணத்தில இருந்தால் எல்லா வசதியும் கிடைக்கும் என்று அடிக்கடி ஆமிக்காரர் அங்குள்ள பேப்பர்காரருக்கு சொல்லித் திரியினமாம். அதுமட்டுமல்லாமல் உப்பிடியான செய்திகளையும் போடச் சொல்லி அன்புக் கட்டளையும் போடுயினமாம் அதுமட்டு மல்ல யாழ்ப்பாணத்தில இருந்து வெளியில ரெலிபோன் எடுப்பது முடியாதவு. கடிதங்கள் அனுப்புவதற்கு போதிய முத்திரைகள் கிடையாது. வைத்தியசாலைகளில் சரியான வைத்தியர்கள் கிடையாது. மருந்தகங்களில் மருந்துகள் கிடையாது. இது போதாதா யாழ்ப்பாணம் எப்படியிருக்கு என்று தெரிந்து கொள்ள? எல்லாம் நடிப்பு மோனை.

வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்பதற்கு எதிர்மாறான சோக நிகழ்வுகள் எல்லாம் யாழ்ப்பாண மண்ணில அமைதியாக நடக்குது கண்டியோ. ஆமி வருகுது என்று புலிகளும், புலி வருகுது என்று ஆமியும் அங்கங்கு விதைத்து விட்ட கண்ணி வெடிகள் இப்போது அப்பாவி சனங்களில் கால்களையும், கைகளையும் துண்டாடி வருகிறதாம். யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில ஒரு நாளைக்கு இரண்டு கேஸாவது கண்ணி வெடிக்கு சிக்கியவர்களில் வருகிறார்களாம்.

சோகம் எமிக்குத்தானே!

# யாழ்ப்பாணத்தில் வெடிக்கும்
# கண்ணி வெடிகளும்! பறக்கும் கை,கால்களும்!!

வடக்கு கிழக்கு மற்றும் தலைநகர் பகுதிகளில் ஏறத்தாழ 15 வருடங்களுக்கு மேலாக தொடர்ச்சியாகவும், விட்டுவிட்டும் நடைபெற்று வந்த மோதல்கள், சண்டைகள் மழை விட்டும் தூவானம் விடாதது போல தற்போது தொடர்ந்து கொண்டு தான் இருக்கின்றன. 15 வருடங்களில் இப்பகுதி மக்கள் பட்ட துன்பங்கள் துயரங்கள் மண்ணுக்குள் முடிந்ததுடன் மட்டுமல்ல,மண்ணுக்கு மேலேயும் ஊனமாக வாழ்ந்து சீரழிந்து கொண்டிருக்கின்றன.

இரண்டுதரப்பு போர்ப் படையினரும் அடிக்கடி பொது மக்கள் வசிக்கும் இடங்களை தமது போர்த் தளமாக்கிக் கொண்ட காலங்கள் நிறையவே உண்டு. இதற்கெல்லாம் அதிக அளவில் ஆயுதச் சேதம் இல்லாமல் ஆள் சேதம் ஏற்படுத்தும் நோக்கத்துடன் கண்ணிவெடிகளும் மிதிவெடிகளும் பயன்படுத்தப்பட்டன. போர் ஓய்ந்த இடங்களில் அமைதி திரும்பியதாக கூறப்படும் இடங்களில் அப்பாவி மக்கள் கண்ணி வெடிகளில்,மிதிவெடிகளில் கால்கைகளை வைத்து துன்பங்களை அனுபவிக்கிறார்கள். வட பகுதியில் ஒரு நாளைக்கு குறைந்தது இரண்டு பேராவது கண்ணி வெடியில் சிக்கி வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுகிறார்கள். கண்ணிவெடி சேதம் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் அதே வேளை பொதுமக்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் நிதானமாக எடுத்து வைக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

அமைதி திரும்பிய பகுதி என்று இராணுவத்தினர் அறிவித்த பகுதிகளில் கூட கண்ணிவெடிகள் வெடிக்கின்றன. இந்த நிலையில் சுயவிருப்பத்தின் பேரில் சொந்த இடங்களுக்கு திரும்பவென யாழ் மண்ணில் காலடி எடுத்து வைத்தவர்கள் எப்போது நமது கால் அடிபட்டுப் போகும் என்ற பயத்தில் உள்ளதாகவும் தெரிய வருகிறது.

இலங்கை அரசாங்கம் கேட்டு அழைத்துக் கொண்டதன் பேரில் ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த கண்ணிவெடி நிபுணர்கள் யாழ்ப்பாணப் பகுதியில் கண்ணிவெடி தோண்டும் பணியில் ஈடுபட்டனர். ஆனால் அவர்களாலேயே கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு விதைகள் விதைப்பது போல் கண்ணிவெடிகள் விதைக்கப்பட்டுள்ளதாகக் கருத்துக் கூறியுள்ளனர்.

புதைக்கப்பட்ட கண்ணிவெடிகள் புதைக்கப்பட்ட இடத்தில் இருந்து விலகிச் சென்றிருப்பதால்அதனை அடையாளம் கண்டு தோண்டி எடுப்பதற்கு பெருந்தொகையான படையினர் தேவைப்படுவதுடன், நீண்ட கால நேரத்தையும் செலவிட வேண்டி இருப்பதாக படையினர் தரப்பில் கருத்து கூறப்பட்டுள்ளது. அரசாங்கத்துக்கு கண்ணிவெடி விடயம் பெரும் தலைவலியை கொடுத்து வருவதாலும், ஆட்பலத்தையும், நேரத்தினையும் இதற்காக செலவழிப்பதை அரசாங்கம் தவிர்த்து வருகிறது. யாருக்கு கால் போனால் என்ன கை போனால் என்ன? மீண்டும் யாழ்ப்பாணம் புலிகள் வசம் போய்விடக் கூடாது என்ற நிலையில் மிதிவெடிகளை தேடும் பணியை தவிர்த்து வருகின்றனர்.

வட பகுதி முழுவதுமாக ஏறக்குறைய லட்சக்கணக்கான கண்ணிவெடிகள் புதைத்து வைக்கப்பட்டிருக்கலாம் எனவும் நம்பப்படுகிறது. இதன் காரணமாக அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டிருப்பதுடன் பெருவாரியான காணிகளில் கூட தோட்டச் செய்கைகளை மேற்கொள்ள முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக அண்மையில் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த நபர் கருத்துக் கூறுகையில்—

''தம்பி எமக்கு எழுதப்பட்ட தலையெழுத்து ஒண்டில் ஆமிக்காரனால் சாகவேணும், அல்லது சிங்களவனால் சாகவேணும், அல்லது எங்கட பெடியங்களால் சாகவேணும்.இதுகள் எல்லாத்திலையும் தப்பினால் கூட உந்த மிதிவெடிகளில் சிக்கியாவது சாகவேண்டும் போல உந்த மிதிவெடிகளில் சிக்கி செத்தாலும் பரவாயில்லை தம்பி! ஆனால் வாழவேண்டிய குழந்தைகள், வயது வந்த பிள்ளைகள் குடும்பத்தினர் என்று கையில்லாம, காலில்லாமல் எப்படி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் தெரியுமா உனக்கு? அதுதான் சரியான கவலை தம்பி.

எப்பத்தான் எல்லாக் கண்ணிவெடிகளையும் எடுக்கப் போறாங்களோ! சனம் எப்பதான் நிம்மதியா வாழப் போகுதோ! பொறுத்திருந்துதான் பார்க்க வேணும் தம்பி.

வெளிநாட்டு அரசுகள் போதிய அக்கறையுடன் கண்ணி வெடிகளில் இருந்து மக்கள் தப்பி வாழ வழி காட்டுமா? அல்லது நித்தம் பறக்கும் ஈழத் தமிழர் கை கால்களை வேடிக்கை பார்த்து நிற்குமா?

—ஆர்-ஆர்.

## மகளிர்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

விழிப்புணர்ச்சி உள்ளவர்களாகக் காணப்படுவர் எனக் கூறினார்.

### கழகப் பொருளாளர்

பொருளாளர் சந்திரகாசன் உரையாற்றுகையில் இல்றைய தினத்தின் அவசியம் பற்றி எடுத்துரைத்ததுடன் இங்கு பரிமாறிக் கொள்ளப்பட்ட கருத்துக்களை எல்லாம் முகாமுக்கு எடுத்துச் செல்ல வேண்டும் எனக் கேட்டுக் கொண்டதுடன், பெண்களை விழிப்புணர்ச்சியடையச்செய்ய பெண்களாக முன்வர வேண்டுமெனவும் கூறினார். அத்துடன் பெண்கள் குடும்ப வாழ்க்கையில் தம் கணவரோடு கருத்து வேறுபாடுகளை மறந்து ஒன்றிணைந்து வாழ்வார்களானால் அவர்களின் பிள்ளைகள் சரியான வழி காட்ட நேர்மையுள்ளவர்களாகவும் கல்விப் பற்றுள்ளவர்களாகவும் வாழ வழி வகுக்கும் என்பதில் எந்த ஐயமும் கிடையாது என்று தெரிவித்தார்.

விழாவின் இறுதியில் ''ஒற்றுமையே எங்கள் பலமாம்'' என்ற கழகப் பாடல் இசைக்கப்பட்டு செயலர் நன்றியுரையுடன்விழா இனிதே நிறைவு பெற்றது.

மன்னார் வழியாக யாழ்ப்பாணம் செல்ல

# வன்னியிலிருந்து வரும் எவருக்கும் அனுமதி இல்லை!

இராணுவ கட்டுப்பாட்டின் இல்லாத வன்னிப் பகுதியில் இருந்து இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள பகுதிக்குள் வருவதற்கு உயிலங்குளத்தில் மக்கள் இராணுவத்தினரால் மட்டுப்படுத்தப் பட்டுள்ளனர்.

உயிலங்குளம் இராணுவ முகாமில் செவ்வாய்,வியாழன், சனி, ஆகிய மூன்று தினங்களில் மட்டும் மக்கள் உள்ளே வரஅனுமதிக்கப்படுகின்றனர். வவுனியா நகருக்குச் செல்வதற்கு சுமார் 125 பேரும் மன்னார் நகருக்குச் செல்வதற்கு சுமார் 400 பேருமாக மொத்தமாக சுமார்525 பேரே ஒரு நாளைக்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

### பொதுமக்களுக்கு அனுமதி மறுப்பு

இதனால் ஏராளமானவர்கள் இராணுவக் கட்டுப்பாடற்ற பள்ளிக் குடாவிலிருந்து உயிலங்குளம் வந்து மீண்டும் திரும்பிச் செல்கின்றனர். மன்னாரூடாக யாழ்ப்பாணம் செல்வதற்கு வன்னியில் இருந்து எவரும் தற்போது உள்ளே வர அனுமதிக்கப்படவில்லை.

உயிலங்குளத்தினூடாக வவுனியா வருவதற்கு அனுமதிக்கப்படுகின்ற 125 பேரும் அநேகமாக அரசாங்க அலுவலர்களும் நோயாளர்களுமே இதனால் பொது மக்கள் எவரும் கடந்த வாரம் வவுனியா வர அனுமதிக்கப்படவில்லை எனத் தெரிய வருகின்றது.

பள்ளிக்குடாவில் இருந்து பெரும் சிரமங்களுக்கு மத்தியில் கால்நடையாக நடந்து வரும் ஆயிரக்கணக்கான மக்கள் உயிலங்குளம் இராணுவ முகாமிற்கு வந்து மீண்டும் திரும்பச் செல்வதனால் பெரும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர்.

பள்ளிக்குடாவிலிருந்தும் உயிலங்குளத்துக்கும் இடைப்பட்ட இடங்களில் உள்ள கோயில்களிலும் மரநிழலுக்கு கீழும் பொது இடங்களிலும் வீதியோரங்களிலும் இம்மக்கள் தங்கியுள்ளனர்.

இந்த மக்கள் இருக்க இடமின்றியும் குடிப்பதற்கு நீர் இன்றியும் சாப்பிடுவதற்கு சாப்பாடு இல்லாமலும் பெரும் அவதிப்படுகின்றனர். இப்பகுதிகளில் உணவுப் பொருட்களின் விலைகள் பல மடங்காக அதிகரித்துள்ளன.

## அமெரிக்க சமாதானப்படை நாடு திரும்பும்

இலங்கையின் நீண்ட காலமாக சமூகப்பணி ஆற்றி வரும் அமெரிக்க சமாதானப் படையை அமெரிக்கா திருப்பி அழைக்கவிருக்கிறது.

இலங்கையில் அடிக்கடி குண்டு வெடிப்பு சம்பவங்கள் நடைபெறுவதால் இவர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருப்பதாக அமெரிக்கா கருதுகிறதாம் இதனாலேயே இவர்களை அமெரிக்கா திருப்பி அழைக்க முன்வந்திருப்பதாக தெரிய வருகிறது. அமெரிக்கா சமாதானப்படையைச் சேர்ந்த 49 பேர் இங்கு பணியாற்றி வருகின்றனர்

அமெரிக்க சமாதானப் படையின் செயற்பாடுகள் தற்காலிகமாக நிறுத்தப்படலாம், ஆனால் இது தொடர்பான இறுதி முடிவு இன்னமும் எடுக்கப்படவில்லை என்று அமெரிக்கத் தூதரக தகவல் கூறுகிறது.

www.padippakam.com



## ஒரு குறளை உணர்வோம்

### பெண் என்பவள் ஆணின் உடைமைகளில் ஒன்றா? திருவள்ளுவர் கருத்து என்ன?

-: அருகோ :-

''பிறன்பொருளாள் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்து
அறம்பொருள் கண்டார்கண் இல்''

பரிமேலழகர் : பிறன் பொருளாள் பெட்டுஒழுகும் பேதைமை—பிறனுக்குப் பொருளாந் தன்மையை உடையாளைக் காதலித்து ஒழுகுகின்ற அறியாமை; ஞாலத்து அறம் பொருள் கண்டார் கண் இல்—ஞாலத்தின் கண் அற நூலையும், பொருள் நூலையும் ஆராய்ந்து அறிந்தார் மாட்டு இல்லை.

பிறன் பொருள்-பிறன் உடைமை. 'அறம்' 'பொருள்' என்பன ஆகுபெயர். செவ்வெண்ணின் தொகை தொக்கு நின்றது. இன்பம் ஒன்றையே நோக்கும் இன்பநூலுடையார் இத் தீயொழுக்கத்தையும் பரகீயம் என்று கூறுவர் ஆதலின் 'அறம்பொருள் கண்டார் கண் இல்' என்றார். எனவே, அப்பேதைமையுடையார் மாட்டு அறமும் பொருளும் இல்லை என்பது பெறப்பட்டது.

மணக்குடவர் : பிறனுடைய பொருளாய் இருப்பவளை விரும்பி ஒழுகுகின்ற அறியாமை, உலகத்து அறமும் பொருளும் அறிந்தார் மாட்டு இல்லையாம்.

பரிதியார் : பிறர் மனையாள் அழகுகண்டு விரும்புதல் பூமியில தன்ம நெறியும், பொருள் நெறியும் கண்டாரிடத்து இல்லை. இன்பநெறி கண்டாரிடத்து உண்டாம்.

காளிங்கர் : தனக்கு உரியாளின்றியே, தன் கணவனுக்கு உரியாளாகி ஒழுகுகின்ற கற்பினாளைத் தாம் விரும்பி ஒழுகும் அறியாமையானது இவ்வுலகத்து அறமும் பொருளும் உணர்ந்தார் மாட்டு இல்லை.

டாக்டர் மு.வ. : பிறனுடைய உரிமையாகிய மனைவியை விரும்பி நடக்கும் அறியாமை, உலகத்தில் அறமும் பொருளும் ஆராய்ந்து கண்டவரிடம் இல்லை.

இங்கே டாக்டர் மு.வ, உட்பட உரையாசிரியர்கள் அனைவரும் ''பிறன் பொருளாள்'' என்ற சொல்லுக்கு பிறனுடைய உடைமை அல்லது உரிமை என்று பொருள் கொண்டு உரை எழுதியிருப்பதால், திருவள்ளுவர் பெண்ணடிமையை ஆதரிப்பவர் என்கிற கருத்து ஏற்பட இடம் கொடுத்து விட்டது.

ஆனால் திருவள்ளுவர் ''பிறன்பொருளாள்'' என்று குறிப்பிட்டிருப்பது ''மற்றவனின் வாழ்க்கைக்கு அர்த்தமாக இருப்பவளை. அவளை நீக்கினால் அவன் ஒரு பொருளே அல்ல'' என்னும் அடிப்படையிலேயே ஆகும். இந்த அடிப்படையை விட்டுவிட்டு ஒருவனுடைய வீடு, நிலம், அணி மணிகளைப் போல மனைவியும் ஒரு சொத்து, போகப் பொருள் என்பதாகப் பொருள் கொண்டு, திருவள்ளுவரை ஒரு ஆணாதிக்கவாதியாகக் குறை கூற முற்பட்டு விடுகின்றனர்.

அக்குறை திருவள்ளுவரை அவர்கள் பார்க்கும் பார்வையில் இருக்கிறதே யொழிய, திருவள்ளுவரிடம் இல்லை.

உண்மையில் 'பிறன் இல் விழையாமை' எனும் இக் கோட்பாட்டை ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவாகவே திருவள்ளுவர் வைத்திருக்கிறார். உரையாசிரியர்கள் ஆணாதிக்கச் சமுதாய காலத்தில் வாழ்ந்தவர்கள் என்பதால், திருவள்ளுவரின் ''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்'' என்ற அந்த அடிப்படைச் சமநோக்குப் பார்வையைக் கருத்தில் கொள்ளாமல் தம் காலவாழ்க்கை நிலையை வைத்து உரையெழுதியுள்ளனர்.

பிறப்பினால் ஒத்த அனைத்து உயிர்களுக்கிடையிலுமே செய்தொழில் வேற்றுமைக்காகச் சிறப்பும் இழிவும் கூடாது என்று சொல்லும் வள்ளுவர், மனிதரில் ஆண், பெண் என்ற பால்வேற்றுமையை வைத்து சிறப்பும், இழிவும்செப்பியிருப்பாரா? ஒருக்காலும் இல்லை.

இக்குறட்பாவில் இரண்டடிகளிலும் முதற்சீர்களாக வரும் 'பிறன்பொருள்' 'அறம்பொருள்' என்ற சொற்களைக் கவனியுங்கள்! ''அறத்துக்குப் பொருள் கண்டார், பிறன் வாழ்க்கைக்குப் பொருளாக இருப்பவரை விரும்பியொழுகும் பேதைமையை ஒருபோதும் கொள்ளார்'' என்ற கருத்து அவ்விரு சீர்களைக் கையாண்டிருப்பதிலிருந்தே புரிந்து கொள்வீர்கள்.

இதனை ஆழ்ந்து நோக்காததாலேயே 'பிறன்பொருள்' என்ற சொல்லை, 'பிறனுக்கு உடைமையானவள்' என்று பொருள் கொண்டு, வடநூல் சான்றுகளையெல்லாம் காட்ட வேண்டிய கட்டாயத்திற்கு உரையாசிரியர்கள் ஆளாகியுள்ளனர்.

பரிமேலழகர் எடுத்தாண்டிருக்கும் 'பரகீயம்' என்ற சொல்லுக்கு 'பாரதாரிகம்' என்ற பாடபேதமும் இருக்கிறது. பரகீயம்-பிறர்க்குரியது. பாரதாரிகம்- பிறர்மனைவியைப் பற்றியது.

திருவள்ளுவரைப் பொறுத்தவரை 'பிறனில் விழையாமை'யானாலும், 'வாழ்க்கைத்துணை நலம்' ஆனாலும் ஆண்-பெண் இரு பாலருக்கும் பொதுவாகத்தான் வைத்திருக்கிறார் என்பதை ஆழ்ந்து நோக்கின் புரிந்து கொள்ளலாம்.

# யாழ். மாநகரசபை கூட்டணி, புளொட் சார்பில் தெரிவான 6பேர் ராஜினாமா

யாழ் மாநகர சபைக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களில் மூவர் தமது பதவிகளை இராஜினாமா செய்துள்ளனர். இதே போல் புளொட் அமைப்பின் சார்பில் தெரிவு செய்யப்பட்ட 6 உறுப்பினர்களில் மூவர் தமது பதவிகளை இராஜினாமா செய்துள்ளனர் எனத் தெரிய வருகிறது.

தமது கட்சியின் சார்பில் வேறு உறுப்பினர்களை நியமிப்பதற்காகவே இந்த உறுப்பினர்கள் தமது பதவிகளை இராஜினாமா செய்துள்ளனர் என மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஈ.பி. ஆர்.எல்.எப். சார்பில் மாநகரசபைக்குத் தெரிவு செய்யப்பட்ட இரு உறுப்பினர்களும் தமது பதவிகளை இராஜினாமா செய்யலாம் எனத் தெரியவருகிறது.

யாழ் மாநகரசபையின் புதிய மேயராக திருமதி சரோஜினி யோகேஸ்வரன் எதிர்வரும் 4ஆம் திகதி பதவி யேற்கவுள்ளார். கூட்டணியின் சார்பில் பதவிகளை இராஜினாமா செய்த 3 உறுப்பினர்களைத் தவிர ஏனையவர்கள் 4 ஆம் திகதி பதவி யேற்கவுள்ளனர்.

புளொட் அமைப்பின் இராஜினாமா செய்த உறுப்பினர்கள் தவிர ஏனையவர்கள் 4ஆம் திக்தி பதவி ஏற்கவுள்ளதாகத் தெரியவருகின்றது.

மாநகர சபைக்கு ஈ.பி.டி.பி. அமைப்பின் சார்பில் தெரிவு செய்யப்பட்ட 6 உறுப்பினர்களும் 4ஆம் திகதிக்குப் பின்னரே பதவி ஏற்கவுள்ளனர்.

ஈ.பி.டி.பி. அமைப்பு கைப்பற்றிய ஏனைய 10 உள்ளூராட்சி சபை உறுப்பினர்களும் ஒரே நாளில் பதவி ஏற்கவுள்ளதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

# சந்தியில் சந்திக்கிறார்கள்

இலங்கையில் நடக்கும் ஈழத்தமிழர்கள் மீதான பிரச்சனைகள் பற்றி சுப்பரும் சோமரும் 'சந்தியில் சந்திக்கப் போகிறார்கள்'' என்ற தலைப்பின் கீழ் சில விடயங்களை இந்த மாதம் முதல் அலசப் போகிறார்கள்.

என்னவென்று கேட்போமா?

சுப்பர்: எல்லாம் போச்சுடா. எல்லாம் போச்சு.

சோமர் : என்னத்தையடா கால்லை போட்டனி? என்ன போச்சுது எண்டு கத்துகிறாய்.

சுப்பர் : இஞ்ச பாத்தியே இரவில படம் எடுக்கிறாங்களாம், அதுவும் நைட் கவுனோட படம் எடுக்கிறாங்களாம்?

சோமர் : என்ன படம் ''சூட்டிங்'' எடுக்கிறாங்களாம்.

சுப்பர் : ''சூட்டிங்'' கும் இல்லை ஒரு மண்ணாங்கட்டியும் இல்லை. கொழும்பில குண்டு வெடிக்கத் தொடங்கியிட்டுது இல்ல அதைச் சாட்டா வைச்சு கொழும்பில் தேடுலது வழமைதான் ஆனா இதென்ன அநியாயம்இருக்கிற ''லாட்ஜ்'' எல்லாம் கதவு தட்டி நித்திரை கொண்டிருக்கிற பெட்டையளையும் எழுப்பி அப்படியே நிற்க வைச்சு படம் பிடிக்கிறாங்களாம் ஆமிக்காரர் தலைநகரில் பெண்களில் நிலை இதுதான் இதனைவிட வேறென்னத்தை நான் சொல்ல.

சோமர் : இதைப் பார்த்துக்கொண்டு நாம் சும்மா இருப்பதா?

சுப்பர் : தமிழாட்களிட்ட வோட்டுக்கேட்டுப் போனவையெல்லாம் உதுகளில தலையிட மாட்டினமாம் போல கிடக்கு.

ஃ ஃ ஃ

சோமர் : ஏனண்ணை உனக்கு உந்தச் சங்கதி தெரியுமே.

சுப்பர் : என்னவாம்

சோமர் : உவை ஆமிக்காரர் உந்தப் பேப்பர்காரரை எல்லாம் கிளி நொச்சிக்குக் கூட்டிக்கொண்டு போனவையாம்.

சுப்பர் : அந்த வயித்தெரிச்சல் கதையை ஏன் கேட்கிறாய் கிளிநொச்சியைப் புடிச்சிப் போட்டம். வாங்கோ காட்டுறம் எண்டு கொழும்புப் பேப்பர்க்காரரை எல்லாம் கூட்டிக் கொண்டு போய் அவையளுக்கும் தங்களைப் போல குண்டு போகாத சட்டை போட்டு, காட்டுப் பாதையாலதான் கூட்டிப் போய் தூரத்தே தெரியும் கிளிநொச்சி பெயர்ப்பலகையை மட்டும் காட்டிப் போட்டு இங்கை நின்றால் புலிகளுக்கு தெரிஞ்சு போயிடும் அங்கால போவம் எண்டு கூட்டிக் கொண்டு போனவையாம். கொழும்பில இருந்து போன பேப்பர்க்காரர் சிலருக்கு காய்ச்சல் வந்துட்டுதாம், போனது வீண் எண்டும் சொல்கிறார்களாம்.

சோமர் : ஏனண்ணை உவ்வளவு எல்லாம் சிலவழிச்சும் ஒரு பிரயோசனமும் இல்லைதானண்ணை.

சுப்பர் : உதைப்போய் ஏன் எனக்கு சொல்கிறாய்! போய் அந்தப் பேப்பர் காரரிட்ட சொல்லு.

சோமர் : அண்ணை தூரத்தில் ''பச்சை'' வாற மாதிரித் தெரியுது. மாறுவம் வா அண்ணை.

## யாழ். கொண்டுவரப்பட்ட தரம் குறைந்த யூரியா

யாழ் மாவட்ட கமநல சேவைகள் திணைக்களத்தினால் கொழும்பில் இருந்து கப்பல் மூலம் கொண்டுவரப்பட்ட யூரியா உரம் தரம் வாய்ந்தது அல்ல என்றும் அதன் காரணமாகவே விலை குறைவாக கமநல கேந்திர நிலையங்களில் விற்பனை செய்யப்படுவதாக விவசாயிகள் மத்தியில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக மாவட்ட கமநல சேவைகள் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் கே. சுந்தரேசனிடம் கேட்டபோது மாவட்டத்திலுள்ள கமநல கேந்திர நிலையங்களில் விற்பனை செய்யப்பட்டு வரும் யூரியா உரத்தினை ஸ்ரீலங்கா பரளைக் கம்பெனியிடமே கொள்வனவு செய்ததாகவும், உரத்தின் தரத்தில் யாருக்காவது சந்தேகம் இருப்பின் அவர்கள் கமநல கேந்திர நிலையங்களுக்குச் சென்று பரிசோதனை செய்து கொள்ளலாம் எனத் தெரிவித்தார்.

படிப்பகம்

# தந்தை செல்வா



த. சபாரத்தினம்

தந்தை செல்வா பிறந்தது மலேயா ஈப்போ நகரில் நாலுவயதில் தாய் அன்னம்மாவுடனும் மூன்று சகோதர்களுடனும் சொந்த ஊரான தெல்லிப்பளைக்குத் திரும்பினார்.

ஆரம்பக் கல்வி தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில்.

இரண்டாம் தரக் கல்வி யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ்ஸில்.

உயர்கல்வி கொழும்பு சென். தோமஸ் கல்லூரியில்.

இலண்டன் பல்கலைக் கழக பி. எஸ். சி. விஞ்ஞான பரீட்டைக்கு வெளிவாசி மாணவனாகத் தோற்றி 1918 ஆம் ஆண்டில் சித்தி எய்தினார்.

சென். தோமஸ் கல்லூரியிலேயே அவருக்கு ஆசிரியர் வேலை கிடைத்தது. அப்போது அவருக்கு வயது 20.

அவரிடம் கற்ற மாணவர்கள் எவரையும் என்னால் சந்திக்க முடியவில்லை. யாராவது தப்பி வாழ்ந்தாலும் அவருக்கு 90 வயதிற்கும் அதிகமாகவிருக்கும்.

நல்லாசிரியர் என்ற பெயர் மட்டும் நிலைத்திருந்ததாக சென். தோமஸில் நீண்ட காலத்திற்குப் பின் படித்தவர்கள் சொல்கின்றார்கள்.

ஒரேயொரு சம்பவம் மட்டும் பதியப்பட்டுள்ளது.

தந்தை செல்வாவின் இளைய சகோதரர் ஒருவருக்குச் சுகவீனம். அவரைப் பார்ப்பதற்கு தெல்லிப்பளைக்குப் போக லீவு கேட்டார் எஸ். ஜே.வி. லீவு மறுக்கப்பட்டது. அவர் பதவியை ராஜினாமா செய்து விட்டு ஊருக்குப் போனார். சுகயீனமுற்ற இளைய சகோதரனைப் போய்ப் பார்க்க வேண்டியது எனது கடமை. அதைப் போன்றே பாடசாலை மாணவர்களுக்குப் பரீட்சை நெருங்கும் சமயம் கற்பிப்பதும் முக்கியமான கடமைதான். இவ்விரண்டு கடமைகளிலும் முக்கியமானதாகப்பட்டதால் பதவியை நானே இராஜினாமா செய்து விட்டு, தம்பியைப் பார்க்கப் போனேன் என்று 1944இல் பாராளுமன்ற உறுப்பினராகியதும் 'தினகரன்' ஏட்டுக்கு அளித்த பேட்டியொன்றில் எஸ். ஜே. வி. கூறினார்.

தெல்லிப்பளையில் இருந்து திரும்பியதும் கொழும்பு வெஸ்லி கல்லூரியில் ஆசிரியராகச் சேர்ந்தார். அவரிடம் அங்கு கல்வி பயின்ற மாணவர்களைச் சந்தித்திருக்கிறேன்.

அவரை எல்லாருமே புகழ்ந்து பேசினார்கள். இச்சந்திப்புகள் என் இளம் பிராயத்தில் இடம் பெற்றதால் விரிவாக நான் எதையும் அவர்களிடம் கேட்கவில்லை. தந்தையின் கதையை எழுத வேண்டி வரும் என நான் சிந்திக்கவேயில்லை.

### எஸ். ஜே. வி.யின் மாணவன்:—

நான் சந்தித்தவர் எஸ். ஜே.வி.யின் மாணவர்களில் ஒருவரான டாக்டர்ஈ.டபிள்யூ. அதிகாரம்.

கல்விமான். தத்துவஞானி ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழக உபவேந்தராக இருந்தவர். பல பௌத்த பாடசாலைகளை ஆரம்பித்தவர். இலங்கை பிரம்மஞான சங்கத்தின் தலைவராக இருந்தவர். தத்துவஞானி கிருஷ்ணமூர்த்தி இலங்கைக்கு விஜயம் செய்த சமயம் அவரைப் பேட்டி காண்பதற்கு எனக்குச் சந்தர்ப்பம் பெற்றுக் கொடுத்தவர்.

எல்லாவற்றிற்கும் மேலாக தமிழருக்கு நியாயம் வழங்கப்பட வேண்டுமென்று பேசியும் எழுதியும் வற்புறுத்திவந்தவர்.

நான் எஸ்.ஜே.வி யின் மாணவன் என்று ஒருமுறை என்னிடம் பெருமையாகச் சொன்னவர். அப்போது அவரிடம் நல்லாசிரியர் எஸ். ஜே. வி. பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்ளத் தவறிவிட்டேன்.

இதை நான் அண்மையில் பிரபலசிங்களப்பத்திரிகையாளர் குறுப்புவிடம் கூறினேன். அடுத்த நாள் சிறிய சிங்களப் பிரசுரம் ஒன்றினைக் கொண்டு வந்து தந்தார் அவர்.

அந்நூலின் பெயர் ''கின்சாவே உல்பற்ற' அதன் அர்த்தம் களங்கமின்மையின் ஊற்று. டாக்டர் ஈ. டபிள்யூ. அதிகாரத்தின் வாழ்க்கைச் சரிதை என்ற மாற்றுப் பெயரும் கொடுக்கப்பட்டது.

'சிலுயின' வார இதழில் பணிபுரியும் தேனகம சிறிவர்த்தன என்ற பத்திரிகையாளரால் எழுதப்பட்டது.

அதிகாரத்தின் வெஸ்லி கல்லூரி வாழ்க்கையைப்பற்றி எழுதிய சிறிவர்த்தன இதைக் கூறுகிறார்.

கேம்பிரிட்ஜ் சீனியர் வகுப்பில் அதிகாரம் ஒரு கவர்ச்சி மிக்க ஆசிரியரைக் சந்தித்தார்.

அவருடைய பெயர் எஸ். ஜே.வி. செல்வநாயகம். அவர் பின்பு ஒரு சிறந்த வழக்கறிஞராகவும், அதன் பின்பு தமிழரசுக் கட்சியின் தலைவராகவும் வந்தார்.

அதிகாரம் அந்த ஆசிரியரை மிகவும் விரும்பினார்.



திரு. செல்வா, 1958ல் தடுப்புக் காவலின்பின் யாழ். திரும்புகிறார். பலாலியில் அவருடன் அவர் துணைவியார் மற்றும் அமிர்தலிங்கம்.

அவர் மாணவர்களுடன் மிகவும் அன்பாகப் பழகினார். அவர் மிகவும் கெட்டிக்கார ஆசிரியர். கணிதமும் விஞ்ஞானமும் கற்பித்தார். அவர் எல்லா மாணவர்களையும் ஒரே மாதிரியாக நேசித்தார். சிங்கள, தமிழ், முஸ்லீம், பறங்கி மாணவர்களை ஒரே மாதிரியாக நடத்தினார். அவர் வகுப்பில் வகுப்பு வாதம் பேசுவதில்லை. வகுப்புவாதம் பேசி அவர் மாணவர் மனதை கெடுப்பதில்லை. மாணவர்களுக்கிடையே நட்புறவையும் சகோதரத்துவத்தையும் வளர்ப்பதற்கு அவர் எடுத்த முயற்சிகள் அதிகாரத்தை வெகுவாகக் கவர்ந்தன.

அதிகாரத்தின் திறனை செல்வநாயகம் ஆரம்பத்திலேயே இனம் கண்டு கொண்டார். கேம்ரிஜ் சீனியர் பரீட்சையில் திறமைச்சித்தி அடைவதற்கு நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். நீங்கள் காலை 7-30 மணிக்கு வந்தால் உங்களுக்குக் கணிதம் சொல்லித் தருவேன் என்று செல்வநாயகம் ஒரு நாள் சொன்னார்.

அன்று முதல் அதிகாரம் பாடசாலைக்கு வேளைக்குப் போனார்.

ஒரு வருடத்திற்கு மேல் தினமும் ஒரு மணித் தியாலத்திற்கு மேல் அதிகாத்துக்குத் செல்வநாயகம் கணிதம் படிப்பித்தார்.

### நடு உச்சி பிரிப்பு

கேம்பிரிஜ் சீனியர் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் ஒரு நாள் தலை சீவிக் கொண்டிருந்தார். வழக்கமாக கன்ன உச்சி பிரிக்கும் அவர் அன்று நடு உச்சி பிரிக்கும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்.

அதை அவதானித்த அவரின் இளைய சகோதரி தாயிடம் போனார். ''அம்மா வாருங்கள். உங்களுடைய செல்ல மகன் தலை வாருவதை பாருங்க'' என்றார்.

இதனை சொற்ப நேரம் நின்று அவதானித்து விட்டு ''என்ன மகனே இன்றைக்கு வேறு விதமாய் தலையிழுக்கிறாய்? பெட்டைகள் தான் நடு உச்சி பிரிப்பார்கள்'' என்று சொன்னார்.

அதிகாரத்துக்கு வெட்கம் வந்தது ஒன்றும் பேசவில்லை. கண்ணாடியைப் பார்த்தார்.

''பெட்டைகள் தான் இப்படித் தலை இழுப்பார்கள்'' என்றார் மறுபடியும் அவரின் தாயார்.

இளைய சகோதரி கிளுகிளுவெனச் சிரித்தார்.

தாயைக் கூட்டி வந்தது யாரென்பது அதிகாரத்திற்குப் புரிந்து விட்டது.

''அம்மா நான் சொல்லுவேனே செல்வநாயகம் மாஸ்டரைப் பற்றி. செல்வநாயகம் மாஸ்டர் நடுஉச்சி தான் பிரிக்கிறார். அவர் பொம்பிளைப் பிள்ளையா?''

''நீயும் ஒரு செல்வநாயகமாக மாறப் போறியா'' என்று கேட்டார் தாய்.

அதிகாரம் பதில் சொல்லவில்லை.

ஆனால் தனக்குள் சொல்லிக்கொண்டார். ''நான் அதிகாரமாகத் தான் இருப்பேன். செல்வநாயகமாக மாட்டேன். ஆனால் நான் இனிமேல் நடு உச்சி தான் பிரிப்பேன்'' என்று.

### நிறைய நல்ல குணங்கள்

அதிகாரம் மட்டுமல்ல. அதிகாரத்தின் வகுப்பில் படித்த அதிகமான கெட்டிக்கார மாணவர்களும் செல்வநாயகத்தைப் போலவே தலை வாரலானார்கள்.

அது வெஸ்லிக் கல்லூரியில் பெரிய பகிடி.

ஏன் செல்வநாயகம் போல் தலை இழுக்கிறாய்? என ஒரு ஆசிரியர் கேட்க அப்படி இழுத்தால் என்ன? என்று திருப்பிக் கேட்டார் அதிகாரம் சிரித்தபடி.

செல்வநாயகம் ஆசிரியரை எல்லா மாணவர்களும் விரும்பினார்கள். அவர் ஒரு நல்லாசிரியர். முன் மாதிரியான ஆசிரியர். மாணவர்களை நேசித்து வழி நடாத்தியவர்.

அதிகாரத்தைப் போல் நடு உச்சி வகுத்த மற்றொரு மாணவர் ஜோசப்.

அவன் ஒருமுறை சொன்னான். ''செல்வநாயகத்திடம்

(14-ம் பக்கம் பார்க்க)

( -ம் பக்கத் தொடர்ச்சி)

என்று தேசிய பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை தலைமையகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இராணுவ கட்டுப்பாடற்ற பகுதியில் இருந்து 72 குடும்பங்களைச் சேர்ந்த 132 பேர் குருநகர் இறங்குதுறை ஊடாக யாழ் குடாநாட்டிற்குள் பிரவேசித்துள்ளனர்.

பரந்தன் தென்கிழக்கு பகுதியில் புலிகளின் நடமாட்டத்தை அவதானித்து படையினர் தாக்குதல் தொடுத்துள்ளனர். புலிகளும் பதில் தாக்குதல் நடத்தினர். இத்தாக்குதலில் இராணுவ வீரர் ஒருவர் காயமடைந்தார். புலிகள் தமது இழப்புக்களுடன் பின்வாங்கியதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது.



யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த தந்தை செல்வா அஞ்சலிக் கூட்டத்தில் சிறிமா மற்றும் பிரமுகர்கள்.

படிப்பகம்

www.padippakam.com



# சாவின் விளிம்பில் 6 லட்சம் பேர்...

(முதல் பக்கத் தொடர்ச்சி)

2,74,582 பேருக்கு உலர் உணவுப் பங்கீடு வழங்கியிருப்பதாகக் கூறுகின்றது. அதன் விவரம் வருமாறு:

| மாவட்டம் | நபர்கள் |
|---|---|
| வவுனியா | 15,000 |
| முல்லைத்தீவு | 95,319 |
| மன்னார் | 60,000 |
| கிளிநொச்சி | 104,263 |

'ஜெயசிக்குறு' நடவடிக்கையால் இடம் பெயர்ந்தவர்களுக்கு வவுனியா மாவட்டத்தில் செய்து கொடுக்கப்பட்டதாக அரசு அறிவித்துள்ள விவரம் வருமாறு:

அ) 3 நாட்கள் 9490 குடும்பங்களுக்கு சமைத்த உணவு வழங்கப்பட்டது.

ஆ) 1997 மே மாதம் கடைசி இரு வாரங்களில் 9490 குடும்பங்களுக்கு இரு வாரங்களுக்கான உலர் பங்கீடு வழங்கப்பட்டது.

இ) 1997 ஜூன் மாதம் முதல் இரண்டாம் வாரங்களில் 9490 குடும்பங்களுக்கு மேலும் இரு வாரங்களுக்கான உலர் பங்கீடு வழங்கப்பட்டது.

இதிலிருந்து என்ன தெரிகிறது? அதற்குப் பிறகு இடம் பெயர்ந்து இடருறும் இம்மக்களுக்கு எவ்வித உதவியும் வழங்கப்படவில்லை என்பதன்றோ! நாம் இப்போது 1998 ஏப்ரலில் உள்ளோம். அப்படியானால் ஏறத்தாழ ஒரு வருடமாய் அம்மக்கள் அடியோடு கைவிடப்பட்டிருக்கிறார்கள் என்பதுதானே!

'ஜெயசிக்குறு' நடவடிக்கை காரணமாக இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்கு உணவுப் பொருள்கள் அனுப்புவதை 13-5-97ல் நிறுத்தியதாகவும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வேண்டுகோளுக்கேற்ப 31-5.97ல் வவுனியா மன்னார் சாலையில் உள்ள மடுசாலை சந்திப்புக்கு உணவுப்பொருள் போக அனுமதிக்கப்பட்டதாகவும், அதற்கேற்ப 1997 நவம்பரில் பறையன் குளத்திலிருந்து இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்கு பின்வருமாறு உணவு பொருள்கள் அனுமதிக்கப்பட்டதாகவும் கூறுகிறது.

கீழ்வரும் 11 நல்வாழ்வு மையங்கள் தற்காலிக முகாம்கள் மூலம் 11814 பேர்களுக்கு பயன் கிடைக்கச் செய்சுதாகச் சொல்லப்பட்டது.

இல்லை. நோய் முற்றிச் செத்தால் சாக வேண்டியதுதான்.

இப்படிச் சாவோரின் தொகை ஒவ்வொரு குடும்பத்திலும் கூடிக் கொண்டு வருகிறது. அவர்களை முறைப்படி நல்லடக்கம் செய்ய முடியாததால், அதனாலும் நோய் நொடிகள் அதிகரிக்கின்றன.

மருந்து வசதி இந்த மக்களுக்கு எந்த அளவுக்கு உள்ளது என்பதற்கு ஒரு உதாரணம் அக்கரையான் குளம் என்கிற இடத்திலுள்ள ஒரு ஆஸ்பத்திரிக்கு 36,000 பேர் படையெடுத்துள்ளனர். ஆனால் அங்கு ஒரே ஒரு டாக்டரும், இரண்டு மருத்துவ உதவியாளருமே உள்ளனர். போதிய மருந்தும் கிடையாது.

இந்த நிலையில் யுத்தத்தின் காரணமாக இடம் பெயர்ந்துள்ள அந்த மக்கள் பசியுடனும் நோயுடனும் யுத்தம் செய்யமுடியாமல் செத்துக் கொண்டிருக்கின்றனர்.

சிறிலங்கா அரசாங்கமோ யுத்தத்தின் மூலம் சமாதானம் என்று சொல்லிக் கொண்டு மேலும் மேலும் வடபகுதிக்குப் படைகளை அனுப்பிக் கொண்டிருக்கிறது. மக்களையெல்லாம் சாகடித்து விட்டு யாரோடு சமாதானம் பேசப் போகிறது?

மனிதாபிமான அமைப்புகளும் சர்வதேச சமுதாயமும் செத்துக் கொண்டிருக்கும் இந்த மக்களைக் காப்பாற்ற உரிய நடவடிக்கைகளை உடன் மேற்கொள்வது அவசர அவசியத் தேவையாகும்.

| நல்வாழ்வு மையங்கள் | 30-11-97ல் பயனடைந்தோர் |
|---|---|
| பூந்தோட்டம் W.C.1 | 1004 |
| ,, W.C.2 | 1043 |
| ,, W.C.3 | 6.35 |
| ,, W C.4 | 1296 |
| ,, W.C.5 | 1439 |
| ,, W.C.6 | 759 |
| ,, STMS | 614 |
| நெலுக்குளம் W.C புது | 1265 |
| வேப்பங்குளம் W-C. | 1306 |
| வவுனியா T/MMV-புது | 1124 |
| சைவப்பிரகாசா | 799 |

இந்தக் குடும்பங்களுக்கு அவர்களின் விருப்பத்திற்கிணங்க சமைத்த அல்லது உலர் உணவு வழங்கப்பட்டதாம்.

ஆறு லட்சம் மக்கள் இடம் பெயர்ந்து அவதியுறும் நிலையில் இந்த நிவாரணம் யானைப் பசிக்கு சோளப் பொரி என்பது போன்றதே.

இந்த ஆறு லட்சம் மக்களில் ஏற்கெனவே அப்பகுதிகளில் குடியிருந்து இடம் பெயர்ந்த 2½ லட்சம் பேர் மற்றும் புலிகளால் பராமரிக்கப்படும் மக்கள் ஆகியோரின் நிலையைப் பார்க்க சுமார் 1 லட்சம் தொகையை கொண்ட மலையக மக்கள் படும்பாடு படுமோசமானது. அவர்களில் பெரும்பாலோர் பிச்சையெடுத்துக் கொண்டிருக்கின்றனர். ஒரு வாய்ச்சோறு அல்லது ஒரு தேநீருக்காக அவர்கள் எதையும் செய்யத் தயாராக இருக்கின்றனர். ஏனென்றால் அவற்றைக் காண்பதே அவர்களுக்கு அரிதாக இருக்கின்றது.

பொதுவாக அங்குள்ள ஆண்கள் அனைவரும் தங்கள் குழந்தை குட்டிகளைக் காப்பாற்ற முடியவில்லையே, குடும்பத்திற்கு தங்களால் எந்த நன்மையும் செய்யமுடியவில்லையே என்ற ஏக்கத்தில் அழுது கொண்டிருக்கின்றனர். ஆண்களின் நிலையே இப்படியென்றால் பெண்கள், குழந்தைகளின் நிலைபற்றிச் சொல்லத் தேவையில்லை.

பசி பட்டினியால் வருந்துவது ஒரு புறமென்றால் நோய் நொடிகளால் அவதியுறுவது மறுபுறம் மலேரியா, டிப்தீரியா போன்ற நோய்கள் திரும்பத் திரும்ப வருகின்றன. எந்த மருந்தும் கிடையாது. சுகாதார வசதிகள் துப்புரவாக

## மூத்த எழுத்தாளர் வல்லிக்கண்ணனுக்கு அமுதன் அடிகள் இலக்கியப் பரிசு!

தமிழகத்தின் மூத்த எழுத்தாளரும், சாதி, மதம், கட்சி முதலிய எந்தவித சார்புமின்றி எழுத்தையே ஒரு தவமாகக் கொண்டு வாழ்ந்து வருபவருமான வல்லிக்கண்ணன் அவர்களுக்கு 1997ஆம் ஆண்டின் அமுதன் அடிகள் இலக்கியப் பரிசாக ரூ. 10,000 வழங்கப்பட்டது.

அமுதன் அடிகள் வெள்ளி விழா அறக்கட்டளை சார்பாக வழங்கப்பட்ட இதன் பரிசளிப்பு விழா 31-1-98 அன்று சென்னை இராயப்பேட்டையில் உள்ள கஸ்தூரி சீனிவாசன் அரங்கத்தில் நடைபெற்றது.

நெல்லை குமரன் வரவேற்க, பேராசிரியர் முத்துக்குமாரன் தலைமை வகிக்க, அமுதன் அடிகள் தொடக்கவுரை ஆற்றினார். பரிசு பற்றிய அறிக்கையை ஜே. ஜே. பர்னாண்டோ வாசிக்க, கவிக்கோ அப்துல்ரகுமான் பரிசை வழங்கினார்.

எழுத்தாளர் பிரபஞ்சன், வலம்புரி ஜான் ஆகியோர் வாழ்த்துரைக்க, வல்லிக்கண்ணன் ஏற்புரை கூறினார். வெ. சந்திரமோகன் நிகழ்ச்சியை நெறிப்படுத்த பேராசிரியர் ஜோசப் இருதயராஜ் நன்றி நவின்றார்.

முனைவர் வா. செ. குழந்தைசாமி, பேராசிரியர் இன்னாசி, அருகோபாலன் உட்பட திரளான தமிழ் அறிஞர்களும் எழுத்தாளர்களும் கலந்து கொண்டனர்.



ஏற்கெனவே, இந்திய சாகித்திய அகாதமி பரிசு உட்பட ஏராளமான இலக்கியப் பரிசுகளைப் பெற்றுள்ள படைப்பிலக்கியக் கர்த்தாவான அவரை ஈழசுதந்திரனும் பாராட்டி மகிழ்கிறது.

## தந்தை செல்வா...

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

நிறைய நல்ல குணங்கள் உள்ளன. தலை வாருவதை மட்டும் நாங்கள் கடைப்பிடிக்கவில்லை. மற்றஎல்லாக் குணங்களையும் பின்பற்றி ஒழுக முயலுகின்றோம்''

செல்வநாயகத்தின் இளவயது வாழ்க்கை சம்பந்தப்பட்ட வேறு குறிப்புகள் உங்களில் சிலருக்குத் தெரிந்திருக்கலாம். தந்தை செல்வாவின் பிற்கால வாழ்க்கை தொடர்பாகவும் பல சம்பவங்கள் தெரிந்திருக்கலாம்.

உங்களுக்குத் தெரிந்தவற்றை எழுதி எனது கொழும்பு முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

தகவல் தந்த பெயர்களுடன் அவை இத்தொடரில் சேர்த்துக் கொள்ளப்படும்.

தந்தை செல்வா ஒரு கிறிஸ்தவர்.

அரசியல் இலாபம் கருதி அவர் மதம் மாறவும் இல்லை. தான் கிறிஸ்தவர் என்பதை மறைக்கவும் இல்லை.

வித்தியாலங்கார பல்கலைகழகத்தின் சிங்கள பௌத்த சங்கத்தின் முன்னாள் தலைவர் வண ஹேவல் பெலரஞ்ன சார, 'டெய்லி நியுஸ்' பத்திரிகைக்கு காரசாரமான கடிதம் ஒன்றை எழுதியிருந்தார். கிறிஸ்தவர் ஒருவர் எவ்வாறு தமிழர்களின் தலைவராக இருக்க முடியும் என்று இக்கடிதத்தில் கேட்டிருந்தார்.

அக்கடிதத்திற்கு செல்வா எழுதிய பதில் இது ''எனது மதம் கிறிஸ்தவம் என்பதைச் சுட்டிக் காட்டினீர்கள். பெரும்பாலானோர் இந்துக்களாக இருந்த தமிழர்களுக்கும் எனக்கும் அதிகத் தொடர்பில்லை என்பதை அதனால் காட்ட முயன்றீர்கள். என்னையோ அல்லது மற்றக் கிறிஸ்தவர்களையோ தலைவர் பதவிகளை ஏற்குமுன் மதம் மாறும்படி கேட்காமை தமிழ் இந்துக்களின் பெருமைக்குச் சான்று பகர்கிறது.

தந்தை செல்வா என்றுமே இந்துவாகத் தன்னைக் காட்டிக் கொள்ள முயற்சி எடுக்கவில்லை.

**வேலா? சிலுவையா?**

ஒரு சம்பவம்.

1952ம் ஆண்டு பொதுத் தேர்தல்.

மூன்றாண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட தமிழரசுக் கட்சி போட்டியிட்ட முதலாவது பொதுத் தேர்தல் அது.

நியமனப் பத்திரம் தாக்செய்ய யாழ்ப்பாணக் கச்சேரிக்குப் போவதற்கு முன்பு தமிழரசுக் கட்சி வேட்பாளர்கள் நல்லூர் கந்தசாமி கோயிலில் காலைப் பூஜைக்குப் போனார்கள். எல்லோருடைய பெயர்களிலும் விசேட அர்ச்சனைகள் செய்யப்பட்டன. செல்வநாயகம் பேரிலும் அர்ச்சனை நடைபெற்றது. அர்ச்சனை முடிந்ததும் குருக்கள் வழக்கம் போல அர்ச்சனை செய்தோருக்கு களாஞ்சி கொடுத்தார்.

செல்வநாகம் அதைப் பெற்றுக் கொண்ட போது, பத்திரிகைகளில் பிரசுரிப்பதற்காக அக்காட்சியைப் படம் எடுக்க வேண்டும் என்று சொன்னார்கள்.

''படம் எடுக்க வேண்டுமானால் எடுங்கள். ஆனால் பத்திரிகையில் போட வேண்டாம். அப்படிச் செய்வது மக்களை ஏமாற்றுவதாக அமையும் அது வேண்டாம்'' என்று திடமாகச் சொல்லி விட்டார் எஸ். ஜே. வி.

1952இல் தேர்தலில் அவர் தோற்கடிக்கப்பட்டார். அதற்குக் காரணங்கள் வேறு, அவரது கிறிஸ்தவ மதமல்ல. எண்பத்தெட்டு சதவீதம் இந்துக்களைக் கொண்ட காங்கேசன் துறைத்தொகுதி மக்கள் 1947 முதல் 1952 வரையும் அதன் பின்பு 1956 முதல் 1977 வரையும் அவரையே தமது பிரதிநிதியாகத் தெரிவு செய்துள்ளனர்.

Edited, Printed, Published and Owned by ARUNACHALAM GOPALAN, No. 14, Sait Colony 1st Street, Egmore, Chennai-600008
Printed at Kuralneri Achagam, 4/77, Subethar Garden, Choolaimedu, Chennai-94

ஜனநாயகம்-சமதர்மம்-சமய சார்பின்மை-நமது பாதை

படிப்பகம்